விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 28 வெள்ளிக்கிழமை (12.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

## சர்வதேச நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்தும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் முஸ்லிம்களும் இணைவு

(அம்பாறை)

"சர்வதேசமே! இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து!!" என்று வலியுறுத்தி அம்பாறை மாவட்டம், பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் முஸலிம் மக்களும் இணைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்தப் போராட்டம் 8ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

இந்தப் போராட்டத்தில் 19



## யாழில் மேலும் இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 2 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள் 19

## விபரீத முடிவெடுத்த முதியவர் உயிரிழப்பு

### மூளாயில் சம்பவம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட மூளாய் - செம்பாட் 19

## பிறந்தநாளில் கத்திக்குத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கத்திக் குத்துக்கு இலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி 19

## வீடு புகுந்து கத்திமுனையில் தாலிக்கொடி அபகரிப்பு

### சிவராத்திரி தினத்தன்று புலோலியில் சம்பவம்


(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலிப் பகுதியில் வீடொன்றில் நுழைந்த திருடர்கள் கத்திமுனையில் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சிவராத்திரி தினத்தையொட்டி வீட்டில் குடும்பஸ்தர் கோவிலுக்குச் சென்ற நிலையில் நேற்று மாலை 6.45 மணியளவில் இச்சம்பவம் 19

### ஜெனிவாவில் இலங்கையை அவதானிக்கின்றோம்

# அதிகாரப் பகிர்வு நாட்டை பலப்படுத்தும்



### இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்த விவாதங்கள் இடம்பெறுகின்ற நிலையில் இந்திய தூதுக்குழு அங்குள்ள நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

மேலும் 13ஆவது திருத்தத்தின்கீழ் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு இலங்கையை பலப்படுத்தும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரோயினுடன் யாழ்.நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரில் வைத்து 19

## கொரோனாவால் 5 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார 19

## சர்வதேச குழுவை இலங்கைக்கு அழைத்து ஈஸ்ரர் தாக்குதல் குறித்து விசாரிக்க வேண்டும்

### சஜித் அணி வலியுறுத்து

(கொழும்பு)

சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவொன்றை இலங்கைக்கு அழைத்து வந்து, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு 19

### 30 ஆண்டுகளின் பின்னர்

## குருந்தூர்மலை ஸ்ரீகோணமடு பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி விழா

(முல்லைத்தீவு)

முலலைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீகோணமடு பிள்ளையார் ஆலயத்தில் 30 ஆண்டுகளின் 19

## யாழ்.-தமிழக படகு சேவை இறுதிக் கட்ட பணிகளும் நிறைவு

### இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை - தமிழகம், காரைக்கால் இடையிலான பயணிகள் படகு சேவை ஆரம்பிப்பது தொடர் பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருக்கும் நிலையில் மிக விரை 19

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜ 19

### செட்டிகுளம் காட்டுப் பகுதியில்

## குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் காட்டுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 23 பேர் புத்தளத்தில் கைது

(கொழும்பு)

கற்பிட்டி பகுதியில் இருந்து படகு மூலம் வெளிநாடு செல்ல முயன்ற வடக்கு - கிழக்கு பகுதியைச் சேர்ந்த 23 பேர் மற்றும் அவர்களை ஏற்றிச் சென்ற கற்பிட்டியைச் சேர்ந்த லொறி சாரதி ஆகியோர் கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி - குரக்கன்ஹேன பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ம-03)

## போலிக் கடவுச் சீட்டு
# யாழ். வாசி உட்பட இருவர் கைது

போலிக் கடவுச்சீட்டு, போலி விசாவை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயன்ற 2 பேர், நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். பருத்தித்துறையை சேர்ந்த இளம் பெண்ணும், வாழைச்சேனையை சேர்ந்த ஆண் ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்- டுபாய் வழியாக ஜெர்மனி மற்றும் கனடாவுக்கு செல்ல முயன்ற போது, கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடிவரவு துறையின் எல்லை கண்காணிப்பு பிரிவு இவர்களை கைது செய்துள்ளனர். (ம-03)

## வவுனியா ஆடைத் தொழிற்சாலையில்
# பணியாளர்கள் உட்பட 8 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் உட்பட 8 பேருக்கு நேற்றிரவு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் சிலர் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகிய நிலையில் 07 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றுபவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி வவுனியாவில் நேற்று 8 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா கண்டி வீதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையை சேர்ந்த 14 பேர் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,250)


**CLERK தேவை (பெண்)**

வெளிநாட்டு மொழி கற்பிக்கும் நிறுவனத்திற்கு O/L தகைமையுடன் 3km இற்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
ஆர்வமுள்ளோர் இன்று (12.03.2021) வெள்ளி 4.00 மணிக்கு CV உடன் நேரில் வரவும். (C-1667)

No. 19, Palaly Road, Aariyakulam
077 978 9456, 076 937 0456

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ரெஸ்ரோறன்ட், ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- நன்கு சமையல் தெரிந்தவர்கள் (Sri Lankan / Chinese)
- வெயிட்டர், சுத்திகரிப்பாளர் (ஆண், பெண்)

(6117)
077 548 8044

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

பகல், இரவு கடமைக்கு ஆண்கள் தேவை.
30 – 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.
( யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.)

☎-076 097 3121

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் புகைப்பட கலையகம் ஒன்றிற்கு கணனி அனுபவமுடைய ஆண் / பெண் இருபாலாரும் தேவை.
முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
நேரில் வரவும் (6104)
இல, 309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
077 716 2339

**வாடகைக்கு**

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட தளபாடமிடப்பட்ட ( T.V, அலுமாரி, மேசை ) 1 அறை, ஹோல், சமையலறை கொண்ட வீடு மற்றும் அறைகள் வாடகைக்கு உண்டு. (6113)
077 953 0496

**அன்னா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1637)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 04 - 03 - 1948



மறைவு 10 - 02 - 2021 (C-1670)

கடந்த 10.02.2021 (புதன்கிழமை) இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சுந்தரம் சிவஞானம்**

( திதி - தை அமரபக்க திரயோதசி )

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று (12.03.2021) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வடக்கு தோட்டம், சமரபாகு. குடும்பத்தினர்

**ஊடகக் கல்வி**

A/L 2023, 2022
2021
புதிய பிரிவு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (C-1671)
ஆசிரியர்
SM.சிவகோணேஸ்
A/L 2021 Paper Class
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
T.P: 070 397 4035

**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு (6118)
070 640 5951
e-mail : engchelvam@gmail.com

**THE SCIENCE CORNER**

Clock Tower Lane, Jaffna.
2023 A/L கணித, விஞ்ஞான பிரிவுகள்
TAMIL & ENGLISH MEDIUM
ஆரம்பம் :- 14.03.2021 ( ஞாயிற்றுக்கிழமை )
நேரம் :- 9.30 a.m

பௌதிகவியல் :- R. ராகுலன் B.Sc
இரசாயனவியல் :- V.K. நந்தா
உயிரியல் :- K. கலைவாணன் B.Sc ( Hons )
உடன்
K. ஜனார்த்தனன் B.Sc, PGDE
இணை.கணிதம் :- Y. கிரிசாந்தன் B.Sc ( Hons )
உடன்
R.A. சிந்துஜன்
ICT :- திருமதி S. கார்த்திகன் B.Sc ( Hons ) Comp. Sc

தரமான தகுதியான ஆசிரியர்களைக் கொண்ட கல்வி நிறுவனம்
தொடர்புகளுக்கு : 076 545 6118 (6115)

# மக்கள் குடியிருப்பில் தொலைத்தொடர்பு கோபுரம்

## விசாரணைக்கு அழைக்கிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

(வவுனியா)

**உக்குளாங்குளம் மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு கோபுரத்தை அங்கிருந்து அகற்றுமாறு அப்பகுதி மக்களினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடி விசாரணைகளை மேற்கொள்வதற்கு தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு விசாரணைகளுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.**

உக்குளாங்குளம் திருச்செந்தூரன் மில் வீதியில் அமைக்கப்பட்டு வரும் தொலைத் தொடர்பு கோபுரம் அப்பகுதியில் வசிக்கும் மக்களின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டினை மேற்கொண்டனர் .

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடி விசாரணைகளை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தொடர்புபட்ட துறை அதிகாரிகள், கிராம அமைப்புக்கள் ஆகியவற்றிற்கு எதிர்வரும் புதன்கிழமை விசாரணைகளுக்கு வருமாறு அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (5-4-299)

# ரஞ்சனை சந்திக்க தடை

(கொழும்பு)

ரஞ்சன் ராமநாயக்கவை இரண்டு வாரங்களுக்கு பார்வையாளர்கள் சந்திக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவுடன் செல்பி எடுத்துக் கொண்ட குற்றச்சாட்டு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# சுரேன் ராகவனிற்கு புதிய பதவி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப செயலாளராகவும் (வெளிநாட்டு விவகாரம்) வன்னி தேர்தல் மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி யும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



அதற்கான நியமனக் கடிதத்தினை கலாநிதி சுரேன் ராகவன், முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் வைத்து நேற்றுப் பெற்றுக் கொண்டார். (நி-4)

# 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்துவதில் முன்னுரிமை

(கொழும்பு)

நாட்டில் நாளை சனிக்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் பதிவாகும் கொரோனா மரணங்களில் அதிகமானோர் 60 வயதுக்கு மேற்பட்டோர் என்பதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

60 வயதிற்கு மேற்பட்டவர்கள் வைரஸ் பாதிப்புக்கு பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இறப்பு எண்ணிக்கையை குறைக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)


## மணிவிழா வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்

உயர்திரு.செல்வரட்ணம் சந்திரராஜா

அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்கள்




பருத்தித்துறை ... பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் 18 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி பதுளை வாழ் மாணவர்களினதும், பெற்றோர்களினதும், சமூகத்தினரதும் அளப்பரிய அபிமானத்தைப் பெற்ற உயர்திரு. செல்வரட்ணம் சந்திரராஜா அவர்களே, இன்று பல்வேறு துறைகளிலும் பிரகாசிக்கும் எங்களுக்கு வழிகாட்டிய உத்தமரே உங்கள் சேவை அளவிட முடியாது. கல்வி நிர்வாக சேவைதனில் அனைத்துப் பதவிகளையும் வகித்து மணிவிழாக் காணும் உங்களை பதுளை மண் என்றும் நினைவிலிருத்திக் கொண்டாடுகிறது. சவால்களைச் சாதனைகளாக மாற்றும் உங்கள் கல்விச்சேவை இன்னும் பிரகாசிக்கும் என வாழ்த்துகிறோம்.

உங்கள் மாணவர்கள்

(C-1669)

க.பொ.த.உயர்தரம் 1992-1994 கல்வியாண்டு மாணவர்கள்,
பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி - பதுளை.


# இராணுவம் போர்க்குற்றம் இழைக்கவில்லை எனில் விசாரணைக்கு ஏன் அஞ்ச வேண்டும்?

## சம்பந்தன் கேள்வி

(கொழும்பு)


இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றங்களை இழைக்கவில்லையெனில் அது தொடர்பான விசாரணைக்கு ஏன் அஞ்சுகின்றீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் கிடைக்க வேண்டும் என்பதும் எமது வேண்டுகோளாகும்.

இதை நாம், 2009இல் போர் நிறைவுக்கு வந்தது தொடக்கம் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானங்களும் இதையே வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால், அரசுதான் ஐ.நாவின் பரிந்துரைகளை நிறைவேற்றாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது.



இராணுவத்தினர் போர்க் குற்றங்களை இழைக்கவில்லையெனில் அவர்களும், அரச தரப்பினரும் அது தொடர்பான விசாரணைக்கு அஞ்சுவது ஏன்? யார் குற்றம் செய்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்குப் பரிகாரம் கிடைக்க வேண்டும். இது தான் சர்வதேச நியதி. இதை மீறி எவரும் செயற்பட முடியாது. சர்வதேசத்தைப் புறந்தள்ளி இந்த அரசு செயற்படுமானால் நாடுதான் பேராபத்தைச் சந்திக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

### வீதிப் பாதுகாப்பு உலகக் கிரிக்கெட் தொடர்

# தரங்க அதிரடி ஆட்டம்; இலங்கை ஜாம்பவான்கள் வெற்றி

வீதிப்பாதுகாப்பு உலகக் கிரிக்கெட் தொடரின், 10ஆவது லீக் போட்டியில் இலங்கை ஜாம்பவான்கள் அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ராஜப்பூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், இலங்கை ஜாம்பவான்கள் அணியும் பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை ஜாம்பவான்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 180 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, உபுல் தரங்க ஆட்டமிழக்காது 99 ஓட்டங்களையும் டில்சான் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், ஷெரீப், சலே மற்றும் ரபீக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இதனைத்தொடர்ந்து 181 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 138 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் இலங்கை ஜாம்பவான்கள் அணி 42 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நஸிமுதீன் 54 ஓட்டங்களையும் காலீத் மசூத் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சில், டில்சான் 3 விக்கெட்டுகளையும், தம்மிக்க பிரசாத் 2 விக்கெட்டுகளையும் ரஸ்ஸல் ஆர்னல்ட் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, ஆட்டமிழக்காது 99 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட இலங்கை ஜாம்பவான்கள் அணியின் உபுல் தரங்க தெரிவு செய்யப்பட்டார். (4)

# முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பெஞ்சமின் காலமானார்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ஜோயி பெஞ்சமின், தனது 60 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

பெஞ்சமின் மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான செயின்ட் கிட்ஸில் 1961 ஆம் ஆண்டு பிறந்தார். எனினும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்காக விளையாடி தனது பெயரை பிரபல்யப்படுத்தினார்.

1994 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் மாத்திரம் அவர் இங்கிலாந்தின் தேசிய அணிக்காக விளையாடினார்.

அந்தப் போட்டியில் அவர் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.


அது மாத்திரமன்றி அவர் இங்கிலாந்தின் தேசிய அணிக்காக இரு போட்டிகளில் விளையாடியுள்ளார்.

முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்திய அவர் 126 போட்டிகளில் விளையாடி 387 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். (4)



இலங்கை துடுப்பாட்ட சங்கத்தின் பயிற்றுவிப்பாளர் கல்வி நிலையத்தின் உதவியுடன் வடமாகாண துடுப்பாட்ட சங்க பயிற்றுவிப்பாளர் கல்வி நிலையம் இம்மாதம் 4,5,6,7 ஆம் திகதிகளில் **Level -01** பயிற்றுவிப்பாளர் பயிற்சி நெறியை வடமாகாணத்தில் முதல் முறையாக நடத்தியது. இந் நிகழ்வு வடமாகாண துடுப்பாட்ட சங்க தலைவர் யோ.றதீபன், செயலாளர் வி.சுந்தரலிங்கம் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சி நெறியை பூரணமாக பூர்த்தி செய்யும் பயிலுநர்களுக்கு இலங்கை துடுப்பாட்ட சங்கத்தால் **Level -01** சான்றிதழ் வழங்கப்படும். (4)

# ஐ.சி.சி.இன் சிறந்த வீரராக அஷ்வின் தெரிவு



ஐ.சி.சி.இன் பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீரருக்கான விருதை அஷ்வின் தட்டிச் சென்றுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் அஷ்வின் சிறப்பாக விளையாடினார்.

பெப்ரவரியில் நடைபெற்ற 3 போட்டியில் 24 விக்கெட் வீழ்த்தியதுடன், 176 ஓட்டங்களையும் அடித்தார். அதில் சென்னையில் விளையாடிய முக்கியமான போட்டியில் சதம் விளாசினார்.

இதன் காரணமாக பெப்ரவரி மாதத்திற்கான ஐ.சி.சி. இன் சிறந்த வீரர் விருதை அஷ்வின் தட்டிச் சென்றுள்ளார்.

ஜனவரி மாதத்திற்கான விருதை ரிஷப் பண்ட் கைப்பற்றினார். ஐ.சி.சி.அறிமுகப்படுத்திய நிலையில் முதல் இரண்டு மாதங்களும் இந்திய வீரர்களே விருதுகளைக் கைப்பற்றியுள்ளனர். (4)

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்

## நேற்று ஆரம்பம்

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம்-2021 தொடர் இம்முறை 30 ஆவது ஆண்டாக நடைபெறுகிறது.

ஆகவே இத்தொடரை சிறந்த முறையில் நடத்துவதற்கு வளர்மதி விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும் பல நடைமுறைகளை கையாண்டு வருகின்றன.

இத்தொடரில் இம்முறை 6 கழக அணிகள் பங்குப்பவுள்ளன. கே.சி.சி.சி, ஜொலிஸ்ரார், கிறாஸ்கொப்பர்ஸ், AB, ஓல்ட் கோல்ஸ், விக்டோரியன்ஸ் அணிகள் பங்குபற்றுகின்றன.

இத்தொடரின் மூலம் யாழ். நகரில் துடுப்பாட்டம் வளர்வதற்கு முன்னோடியாக திகழ்கின்றது.


அத்துடன் இத்தொடரை லீக் முறையில் நடத்துவதற்கு கழகங்களின் வளர்ச்சி இன்றியமையாதது. ஆகவே இத்தொடரில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் மட்டும் பங்குபற்ற முடியும். ஆகவே யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் வளர்ச்சிக்கும் இத்தொடர் மிக முக்கியமான சுற்றுப்போட்டியாக அமைந்துள்ளது.

இத்தொடர் 1992 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இத்தொடரின் வெற்றிக்கிண்ணத்தை முதன் முதலில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் நேற்று வியாழக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. அந்த வகையில் கே.சி.சி.சி.அணியும் விக்ரோறியன்ஸ் அணியும் பிற்பகல் ABயும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின. (4)

# இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனப்பதார்த்தங்கள்

## சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

**இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயன பதார்த்தங்கள் காணப்பட்டமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.**

கொழும்பு துறைமுகத்தின் உணவு நிர்வாகப்பிரிவின் அதிகாரிகள் முன்னெடுத்த பரிசோதனைகளில் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயன பதார்த்தங்கள் காணப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் கொள்கலன்கள் கடந்த மூன்று மாதங்களுக்குள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தேங்காய் எண்ணெய் இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் அடங்கிய மீன் கொள்கலன்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த மீன்களில் ஆசனிக் மற்றும் பாதரசம் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளதாக பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)



விவசாயிகளால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக சுமார் 3 மணிநேரம் மாத்தறை - கொழும்பு பிரதான வீதி முடக்கப்பட்டது. யானைக்கும் மனிதனுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதற்காக இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் அம்பாந்தோட்டை தொடக்கம் கொழும்பு வரை விவசாயிகள் பேரணியாக செல்வதாகவும் எச்சரித்துள்ளனர்.

## 70 இலட்சம் பெறுமதியான காரை கொள்ளையிட்ட 23 வயது இளைஞன் சிக்கினார்

(கொழும்பு)

விபஸ்ஸனா பாவனா மத்திய நிலையத்தின் விகாராதிபதி உடுதும்பர காஷ்யப தேரரின் சொகுசுக் காரை கொள்ளையடித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 7.15 மணியளவில் தலவத்துகொட இலங்கை வங்கிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த போதே குறித்த கார் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் எனினும் கொள்ளையடிக்கப்பட்டு சுமார் அரை மணித்தியாலத்திற்குள் அதனை மீட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தலங்கம பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காரில் பொறுத்தப்பட்டிருந்த ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கலல்கொட கிராமோதய மாவத்தையில் அது மீட்கப்பட்டுள்ளது. காரை பொலிஸார் கைப்பற்றிய போது அதில் இலக்கத்தகடு அகற்றப்பட்டிருந்ததோடு, ஜி.பி.எஸ். கருவியை அகற்றுவதற்கு பதிலாக வாகனத்தின் பிறிதொரு பகுதியும் அகற்றப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட காரின் பெறுமதி 70 இலட்சம் ரூபாவாகும். இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 23 வயதுடைய கலல்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். தலங்கம பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## வெளிவிவகார அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் திருமலையில்

(திருமலை)

வெளிநாட்டு அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் திருகோணமலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதன்படி வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பேஜ் உடன் இணைந்து வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாளை பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலையில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

இந்த கொன்சியூலர் அலுவலகத்தைத் திறந்து வைப்பதானது, கிழக்கு மாகாணம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்குச் செல்லாமல் கொன்சியூலர் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தை நிறுவுவதன் மூலம், வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்கான பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றை சான்றுறுதிப்படுத்துதல், வெளிநாட்டில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்குதல், புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களின் நிவாரணம் மற்றும் இழப்பீட்டுக் கோரிக்கைகளை எளிதாக்குதல் மற்றும் வெளிநாட்டிலிருந்து இறந்த மனித உடல்களை திருப்பிக் கொண்டு வருதல் போன்ற பல கொன்சியூலர் சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த அலுவலகம் திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரை பொதுமக்கள் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்குரிய மின்னஞ்சல் முகவரி: trincomalee. consular @mfa.gov.lk. (நி-4)

## மனித உரிமைகளுக்காக முன்னிற்பவர்கள் துன்புறுத்தப்படக்கூடாது என வலியுறுத்து

(கொழும்பு)

மனித உரிமைகளுக்காக முன்னிற்கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்றோர் துன்புறுத்தப்படக்கூடாது என நெதர்லாந்து, ஜேர்மனி, இங்கிலாந்து, சுவீடன், எஸ்டோனியா, லித்துவேனியா, பின்லாந்து மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் மனித உரிமைகள் தூதுவர்களால் இவ்வாறு கூட்டாக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்காக முன்னிற்கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா போன்றோரை துன்புறுத்தக்கூடாது என்பதுடன், அவர்களை பாதுகாக்க வேண்டும் எனவும் குறித்த நாடுகளின் தூதுவர்கள் கூட்டறிக்கையூடாக வலியுறுத்தியுள்ளனர்.

மனித உரிமைகளுக்காக போராடுபவர்களை பாதுகாப்பதும் ஊக்குவிப்பதும் எந்தவொரு நாட்டினதும் அவசியம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-4)

## மியன்மார் இராணுவ ஆட்சியை இலங்கை மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறதா?

### அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் வுன்னா மாவுங் லுவினை பிம்ஸ்ரெக் மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அனுப்பியுள்ள கடிதத்திற்கு மியன்மார் நாட்டு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதனூடாக இலங்கை, மறைமுகமான முறையில் மியன்மாரின் இராணுவ ஆட்சியை ஏற்றுக்கொண்டுள்ளதாக, சமூக வலைத்தளங்களில் மியன்மார் பிரஜைகள் தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா கூட்டமைப்பு என்ற பிம்ஸ்ரெக் அமைப்பின் தற்போதைய தலைமைத்துவத்தை இலங்கை வகிக்கின்றது. பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து முதலான நாடுகள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இந்தக் கூட்டமைப்பின் 17 ஆவது அமைச்சர்கள் மாநாடு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இணையவழி மெய்நிகர் மாநாடாக கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் கையொப்பத்துடன், மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரான வுன்னா மாவுங் லுவினுக்கு அழைப்பு விடுத்து, கடந்த 2 ஆம் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இவ்வாறான கடிதமொன்றை அனுப்பியதன் மூலம், மியன்மார் ஆட்சியை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளதாக மியன்மார் பிரஜைகள் தங்களது டுவிட்டர் மற்றும் பேஸ்புக் பதிவுகளில் தெரிவித்துள்ளனர். (நி-4)

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் ஆளுமைத் திறனூக்கப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சியினை மன்றத்தின் செயலாளரும் துணைப்பேராசிரியருமான த.நந்தகுமரன் வழங்குவார்.


எனவே புதிய பயிற்சியாளர்கள் தங்களது பதிவினை முற்கூட்டியே மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு அறிவுத்திருக்கோவிலின் 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5-4)



கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:- ரவிசாந்)

# சுகாதார தொண்டர்கள் நேற்று வீதி மறித்துப் போராட்டம்



(நல்லூர்)

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ-9 பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்தைச் சீர்செய்ய யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தியிலும் கச்சேரி-நல்லூர் வீதியிலும் பொலிஸார் மாற்றுப் பாதைகளில் வாகனங்களை அனுப்புகின்றனர்.

தமக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் அதனை மீளப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக கடந்த முதலாம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களது போராட்டம் உணவுதவிர்ப்பு போராட்டமாக விரிவாக்கமடைந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முற்பகல் அவர்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019 ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு சுகாதாரப் பணியாளர்கள் நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

எனினும் குறித்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட சுகாதார பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக குறித்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிரந்தர நியமனக் கடிதம் பெற்ற சுகாதார பணியாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வினை வழங்குமாறு கோரியே வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாகத் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (5-4-33-104)




## அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்


(குப்பிழான்)

யாழ்.மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு இந்த மாதம் 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அனைத்து தராசுப் படிகள், லீற்றர் அளவைகள், மீற்றர் கோல்கள் ஆகிய அளத்தல் கருவிகள் பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளது.

முத்திரை பதிக்காது நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்திற்குப் பாவிப்பது மாத்திரமல்ல, வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து வர்த்தகர்களும் (ப.நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) இதனைக் கருத்தில் கொண்டு இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி தங்களுடைய தராசுகள் மற்றும் அளவுகோல்களுக்கு முத்திரையிடுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (5-4-18)

## குப்பை மேட்டில் தீ; கட்டடமும் சேதம்




(சாவகச்சேரி)

தனங்கிளப்பு வீதியில் இந்து மயானத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சாவகச்சேரி நகரசபையின் குப்பை மேட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ஏற்பட்ட தீப் பரவல் காரணமாக தரம் பிரிக்க வைக்கப்பட்டிருந்த குப்பைகள் எரிந்து நாசமானதுடன் நகரசபைக்கு சொந்தமான கட்டடம் ஒன்றும் தீக்கிரையாகியுள்ளது.

கழிவுகளை தரம் பிரிக்கவென அமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றே குப்பை மேடு வழியாக வந்த தீயால் எரிந்து நாசமாகியுள்ளது.

இதன்போது கட்டடத்தினுள் காணப்பட்ட தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள், மின் உபகரணங்கள் மற்றும் தொழிலாளர்களின் உபகரணங்கள் ஆகியனவும் தீக்கிரையாகின.

இருப்பினும் விரைந்து செயற்பட்ட நகரசபையினர் தீ மேலும் பரவி அருகில் உள்ள ஏனைய கட்டடங்களுக்கு செல்லாதவாறு தீயைக் கட்டுப்படுத்தினர். சாவகச்சேரி நகரசபையின் குப்பை மேட்டில் அடிக்கடி இவ்வாறான தீ விபத்துகள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)



தமிழி அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட முனைவர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸின் "சொல்விளையாட்டு விளையாடுவோம்" என்ற கையெழுத்துப்பிரதி நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொதுசன நூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளருமான சுந்தரம் டிவகலாலா கலந்துகொண்டார். மற்றும் யாழ்.தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கோப்பாயில் விபத்து; இளைஞன் காயம்

(குப்பிழான்)

கோப்பாய் பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் அளவெட்டியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

விறகுக் குற்றிகளை ஏற்றிக் கொண்டு கைதடி- மானிப்பாய் வீதி ஊடாக மல்லாகம் நோக்கிப் பயணித்த சிறிய ரக உழவு இயந்திரத்தில் ஒரு சில்லின் காற்றுத் திடீரெனப் போனமையால் குறித்த உழவு இயந்திரம் கோப்பாய் பாலத்திற்கு அருகில் வீதியில் நேற்றுப் பிற்பகல் முதல் நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில் குறித்த வீதி ஊடாக இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நிலையில் சிறிய ரக உழவு இயந்திரத்தின் பின்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் குறித்த இளைஞன் காயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது.

காயமடைந்த இளைஞன் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-18)

# அனைத்து பல்கலைக்கழகங்களையும் திறக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் அடுத்த மூன்று வாரங்களுக்குள் நாட்டிலுள்ள அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களையும் மீண்டும் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதற்காக சுகாதார அதிகாரிகளிடம் அனுமதி கோரியுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

இவ்வாறு திறக்கப்படும் பல்கலைக் கழகங்களில் மாணவர்களுக்கான கொவிட் தடுப்பூசியை ஏப்ரல் முதல் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.(நி-4-8)

# அசோக் அபேசிங்கவிடம் சி.ஐ.டியினர் வாக்குமூலம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க கூறிய கருத்துக்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று அவரிடம் இருந்து ஒரு வாக்குமூலத்தை பதிவுசெய்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் அசோக் அபேசிங்க நேற்றுக் காலை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜரான நிலையிலேயே அவரிடமிருந்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கை பதிவுசெய்த கடந்த திங்களன்றும் அதற்கு மறுநாளும் ஆஜராகுமாறு அசோக் அபேசிங்கவுக்கு சி.ஐ.டி.யினர் அழைப்பாணை அனுப்பியிருந்தனர். எனினும் பாராளுமன்ற அமர்வுகள் காரணமாக அவர் ஆஜராகவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷ ஆகியோர் தொடர்புபட்டுள்ளதாக அவர் அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பில் சில பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் அளித்த முறைப்பாட்டுக்கு இணங்கவே சி.ஐ.டி.யினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டனர். (நி-4)


## மனதார வாழ்த்துகிறோம்

கல்விப் புலத்தில் சிறந்த பணியாற்றி மணிவிழாக் காணும் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு செல்வரட்ணம் சந்திரராஜா**

அவர்களே

அஞ்சா நெஞ்சத்துடன்
கடமையே கண்ணாகக் கொண்டு
சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்து
இடரிலும் பணி செய்த உத்தமரே..





அமைதியான நடை
தெளிவான சிந்தனை
வியக்கவைக்கும் முகாமைத்துவம்
அனைத்தையும் கொண்டவரே.
உங்கள் கல்விப் பயணத்தில்
ஆசிரியராகவும்
தேசிய கல்லூரி அதிபராகவும்
உதவிக்கல்விப் பணிப்பாளராகவும்
பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும்
பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும்
வலயக் கல்விப் பணிப்பாளராகவும்
பல படிநிலைகளிலும் பணியாற்றி
சாதித்தவரே
உங்கள் எதிர்காலம் சிறக்கட்டும்
உங்கள் கல்விப் பணி தொடரட்டும்
மீண்டும் உங்கள் வரலாறு
தமிழர் தேசத்தில்
அதிகமாக எழுதப்படட்டும்
வாழ்த்துகிறோம்

(C-1662)

வயாவிளான் குட்டியபுலம் அ.த.க. பாடசாலை நிறுவுநர்,
அமரர் ஜோன் ஹென்றி குடும்பத்தினர்.



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2 ஆம் பாதம்<br>கி.பா: செவ்.சூரி 4 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L, மேசன்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண். வெளி நாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11579 | பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 52 செவ் 7 சூரி 10 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BIO Medical Science U.K,<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். பட்டதாரி உள்ள மணமகன் PR முக்கியம்<br>தொ.இ: G/1965 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 7 சூரி 5 இல் உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L, T.O Officer<br>எதிர்பார்ப்பு: சாதாரண உத்தியோகம் பார்க்கும் பெண். உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11582 | பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 45 செவ் 2 சூரி 8 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: மணமகன் அரசாங்க உத்தியோகமாக இருத்தல் நன்று. நற்பழக்கம் உள்ளவரும். சைவபோசனமாகவும் இருக்க வேண்டும். வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/1989 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 27 செவ் 8 சூரி 7 இல்<br>உயரம்: 6.2<br>தகைமை/தொழில்: இயந்திர பொறியியலாளர். தனியார் கம்பனி கனடா<br>எதிர்பார்ப்பு: அழகான மணமகள். கனடா. உள்நாடும்.<br>தொ.இ: B/11583 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 7 1/4 செவ் 6 சூரி 5 இல் உயரம்: 5'6'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: மணமகள் உத்தியோகமாகவும் நற்பழக்கம் உள்ளவராகவும் சுத்த சைவ போசனமாகவும் இருத்தல் நன்று.<br>தொ.இ: G/1990 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 26 1/2 செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்: 182cm<br>தகைமை/தொழில்: B.Sc ,Work-Surveyor<br>எதிர்பார்ப்பு: அழகிய பெண். உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11584 | பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 124 3/4 செவ் 1 சூரி 9 இல் உயரம்: 151cm<br>தகைமை/தொழில்: B.A பட்டதாரி. நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன். உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/2006 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## கோல்டன் ஈகிள் கே.ரீ பிறைவேட் லிமிடட்

**கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.**

O/L படித்த நல்ல தேக ஆரோக்கியமுள்ள 5'4'' உயரம். 22 வயது முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கவும்.

**15.03.2021 தொடக்கம் 20.03.2021 வரை காலை 9.00 மணிமுதல் மாலை 3 மணிவரை**

தேவையான ஆவணங்கள்.

1. ஆள் அடையாள அட்டை பிரதி.
2. பிறப்பு சான்றிதழ் பிரதி
3. கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் மூலப்பிரதி
4. கல்வி சான்றிதழ்கள்

குறிப்பு:- சம்பள நிர்ணய சபையால் விதிக்கப்பட்ட ஊதியமும் அத்துடன் EPF+ETF 15% வழங்கப்படும்.

(C-1663)

கோல்டன் ஈகிள் கே.ரீ.பிறைவேட் லிமிடட்
இல.758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய்.

1. வரவேற்பாளர்/காசாளர் (Receptionist/Cashier)
2. ஆய்வுகூட பயிலுநர் (Laboratory Trainee)
3. இரத்த மாதிரி காவுனர் (Blood Sample Career Boy)
4. முதியோர் பராமரிப்பு சேவை பராமரிப்பாளர். ஆண்கள்/பெண்கள். (Bystanders Male/Female)

விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (E-Mail) அனுப்பி வைக்கவும்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய், சுழிபுரம்.
மின்னஞ்சல்:- moolaii@yahoo.com

(C-1657)

தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய்.

# ஆலையில் உடைக்கப்படும் கற்கள் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படுவதில்லை

## பிரதேசசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 14 ஆம் கட்டைப்பகுதியில் உள்ள கல்லுடைக்கும் ஆலையினரால் உள்ளூர்மக்களின் கட்டுமானத் தேவைகளுக்கான அத்திபாரக் கற்கள் வழங்கப்படுவதில்லை எனப் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் இ.சத்தியசீலன் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 2012ஆம் ஆண்டில் இருந்து கல்லுடைக்கும் ஆலைகள் ஒட்டுசுட்டானில் இயங்கி வருகின்றன. ஆனால் அப்பகுதி மக்களின் தேவைகளுக்கு அத்திபாரக் கற்கள், சல்லிகள் என்பன இவ்வாலையில் இருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக கூட்டங்களில் தெரிவிக்கும் போது ஒரு நாள் அல்லது இரு நாட்களுக்கு சல்லிகள் மட்டும் வழங்கப்படும். ஆனால் அத்திபாரக் கற்கள் வழங்கப்படுவதில்லை. அவை பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

அவ் ஆலையிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லுகின்ற டிப்பர் வாகனங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளூர் மக்கள் அதிக விலைகொடுத்து வேறு பிரதேசங்களில் இருந்து கற்களை பெறவேண்டிய நிலை உள்ளது.

நீண்டகாலமாக நிலவி வருகின்ற இப்பிரச்சினை தொடர்பில் பலமுறை கோரிக்கைவிடுத்தும் உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை. உள்ளூர் மக்களின் கட்டுமானங்களுக்கு தேவையான அத்திபாரக்கற்கள், சல்லிகளை ஒட்டுசுட்டான் ஆலையிலிருந்து பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கைகள் அதிகாரிகள் எடுக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (5-4-350)

# இளைஞர் அபிவிருத்தி தொடர்பில் விசேட கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்குகின்ற முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம், தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றின் இளைஞர் பிரதிநிதிகளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகளுக்கும் இடையில் இளைஞர்களின் அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது எதிர்காலத்தில் இளைஞர்களின் கல்வி , கலாசாரம் , விளையாட்டு, தொழில் முயற்சி உள்ளிட்ட பல்வேறு வகைகளில் எவ்வாறு உதவுவது என்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. (5-4-281)

# வவுனியாவில் மேலும் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(குருமன்காடு)

வவுனியா, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகிய நிலையில் ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட ஈரப்பெரிய குளம், பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும்கொரோனா தொற்று ஏற்பட்டமை நேற்றுக் காலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்ட நான்கு பேருடனும் தொடர்புகளைப் பேணியவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (5-4-250)



உலக தாய் மொழி நாள் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் மருத்துவ கலாநிதி மா.ஜெயராசா தலைமையில் நடைபெற்றது.

(படம்: தில்லைநாதன்)

# வீட்டுத்திட்ட நிலுவை தொகையை வழங்கவும்

## பிரதமருக்கு செல்வம் எம்.பி.கடிதம்

(நெளுக்குளம்)

வீட்டுத்திட்ட நிலுவைத் தொகையை வழங்குமாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமருக்கு கடிதம்மூலம்கோரியுள்ளார்.

நேற்று அவர் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் வீடமைப்பு மற்றும்கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் காலப் பகுதியில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டமானது இற்றைவரைக்கும் பூர்த்தி செய்யப்படவில்லை.

மற்றும் பயனாளிகளுக்கான மீதமுள்ள கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

இந்த ஏழைமக்கள்தங்கள் சொத்துக்களையும்மற்றும் அவர்கள் கையில் வைத்திருந்த பணத்தையும் வைத்துதான் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இந்த வேலையை ஆரம்பித்தார்கள்.

ஆனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை நிறைவிற்கு வரவில்லை. இந்த மக்கள் கடந்த உள்நாட்டுப்போரில் அனைத்தையும் இழந்தவர்கள். அவர்கள் இப்பொழுது மிகவும் அவதிப்படுகிறார்கள்.

குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் சமூகத்தின் பல நிலைகளிலும் வாழும் இம் மக்கள் தங்களுக்கென ஓர் நிரந்தரவீடு இன்மையால் இன்னும் சிறிய குடிசைகளில் தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். வீட்டு வசதி என்பது ஒரு நாட்டு குடிமகனின் அடிப்படை தேவை. ஆனால் இந்த மக்கள் அதைப் பார்க்கவும் அனுபவிக்கவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு சுதந்திரமாக வாழவும் இந்த பாதிப்புக்களில் இருந்து விடுபடவும் ஒரு வீடு தேவை. எனவே அவர்களின் இந்த வீட்டுத்திட்ட குறைகளை நிறைவிற்கு கொண்டுவவதற்கும் அன்றாட வாழ்வினை சுமுகமாக நகர்த்தி செல்வதற்கும் வழிவகுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். (5-4-299)




# பிரதேச சபையினால் நிதியுதவி வழங்கி வைப்பு



(அக்கராயன்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்டு வாழும் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக குறித்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி ஒட்டுசுட்டான் மற்றும் ஒலுமடு உப அலுவலகங்களில் இடம்பெற்றது.

இதில் 12 ஆயிரம்ரூபாய் பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன. (5-4-350)

# மல்லாவிப் பொலிஸாரும் ரவிகரனிடம் வாக்குமூலம்



(அக்கராயன்)

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் மல்லாவிப் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணியில் பங்கு கொண்டமைக்காக நேற்று முன்தினம் காலையில் அவரது வீட்டிற்குச் சென்ற பொலிஸார் வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர். ஏற்கனவே முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸார் வாக்கு மூலங்களைப் பெற்ற நிலையில் மல்லாவிப் பொலிஸார் நேற்று முன்தினம் வாக்கு மூலம் பெற்றுள்ளனர். (5-4-281-350)

# இராசிபலன்

**12.03.2021**
**மாசி 28, வெள்ளிக்கிழமை**
**சதுர்த்தசி பிற்பகல் 3.45 மணிவரை**
**சதயம் முன்னிரவு 11.25 மணிவரை**
**சுபநேரம் 6.22-7-52 மணிவரை**
**இராகுகாலம் 10.52-12.22 மணிவரை**
**சந்திராஷ்டமம் - பூசம், ஆயிலியம்**
வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.


மிதுனம்

கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.


கடகம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.


சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், தேகநலனில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், தாய்வழி உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


தனுசு

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் கூடும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.


மகரம்

கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு.


மீனம்

ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

காலம் வீணானால் திரும்பக் கிடைக்காது

## புத்தாண்டிற்கு முன் நாடு திரும்ப வேண்டும்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கோரியுள்ளது.

அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக தேசிய விமான சேவையை பயன்படுத்த முடியும் என கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## விபத்தில் சிக்கி பொலிஸ் பலி

(ஹபரண)

ஹபரண - பொலநறுவை வீதியில் இராணுவ ட்ரக் வண்டியில் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மின்னேரியாப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரண - பொலநறுவை வீதியில் நேற்று முன்தினம் மாலை பொலிஸ் உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் இராணுவ ட்ரக் வண்டியுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. (நி-4)

## பெரும்பான்மை வாக்குகளை தக்கவைக்க வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராக செயற்பட மாட்டோம்- ரணதுங்க



(கொழும்பு)

பெரும்பான்மை வாக்குகளைப் பாதுகாத்துக் கொள்ள உண்மையை மூடி மறைக்க முடியாது என சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்கும் அது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கைக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. குண்டுத்தாக்குதல் சம்பவமும் அதனை ஆராய்வதற்கான ஆணைக்குழு நியமனமும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம் பெற்றது. குண்டுத்தாக்குதல் தொடர்பிலான அறிக்கையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை பகிரங்கமாக சுட்டிக்காட்டியுள்ளோம். இதனை அரசாங்கத்தின் பல வீனம் எனக் கருத முடியாது. குறைபாடுகள் பரிசீலனை செய்யப்படுகிறது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அரசியல் தேவைக்காக பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தக்கவைத்துக் கொள்ள மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு முரணாக ஒரு போதும் செயற்படமாட்டோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## ரஞ்சனின் விடுமுறை பிரேரணையை நிராகரித்த சபாநாயகர்

### பக்கச்சார்பான செயற்பாடு என்கின்றார் சஜித்

(கொழும்பு)

ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி அவ்வாறே தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்திருந்தும் அவரை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மற்றும் அவரின் விடுமுறை பிரேரணையை நிராகரித்திருப்பது சபாநாயகரின் பக்கச்சார்பான செயற்பாடாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற விடுமுறை பிரேரணை சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு



குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு பின்னரே ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாகும் என்றால், அதற்கு இடைப்பட்ட காலத்தில் பாராளுமன்ற சபை அமர்வு கூட்டப்பட முடியாத நிலை ஏற்பட்டால் அவரது பாராளுமன்ற பதவிக்கு பாதிப்பு ஏற்படும். அதனால் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்குரியது. அதனை நிராகரிக்கக்கூடாது என்றார்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர் நீதிமன்றமே தண்டனை விதித்து தீர்ப்பளித்திருக்கின்றது. அதற்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியாது.

தற்போது அவர் நீதிமன்றத் தண்டனையைப் பெற்றுவருகின்றார். அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கும். அதுவரை அவர் தொடர்பாக எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாது.

அத்துடன் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதியே இரத்தாகின்றது. அதற்கு இடைப்பட்ட காலத்தில் பாராளுமன்றம் கூடுகின்றது. அதனால் நீதிமன்ற உத்தரவு கிடைத்த பின்னரே ஒரு தீர்மானத்துக்கு வரமுடியும் என சபாநாயகர் தெரிவித்தார். (நி-4)




# அதிர்ஷ்டம்



ஒருமுறை தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒழுங்காக வேலை செய்கிறார்களா?, சோம்பேறிகளாக வாழ்கிறார்களா? என்று அறிய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

எனவே, அதை அறிந்து கொள்ளும் பொருட்டு, திடீரென்று விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்.

எல்லா மக்களும் விருந்து, கேளிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவிப்புச் செய்திருந்தார்.

விருந்துக்குக் கூட்டம் கூட்டமாக மக்கள் சென்ற வேளையில் மன்னர் மட்டும், மாறுவேடம் போட்டுக் கொண்டு நகரைச் சுற்றி வந்தார்.

அவர் ஒரு கிராமத்துக்குள் தம்முடைய குதிரையைச் செலுத்தி கொண்டு வந்து பார்த்தபோது, அக்கிராமத்தில் ஒருவருமே இல்லை.

எல்லோரும் மன்னரின் விருந்துக்காக அரண்மனைக்குச் சென்றிருந்தனர்.

ஆனால், ஓரிடத்தில் ஒரேயொரு பெண் மட்டும் கடுமையாக வேலை செய்து கொண்டிருந்தாள்.

இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட மன்னர் அவளிடம் நெருங்கிச் சென்று, "பெண்ணே, இந்தக் கிராமமே காலியாக இருக்கிறதே... இங்குள்ளவர்கள் என்னவானார்கள்?" என்று கேட்டார்.

அவளோ தன் வேலையிலேயே மும்முரமாக மூழ்கி இருந்த காரணத்தினால், தன் பார்வையைத் திருப்பாமலேயே சொன்னாள்.


"உங்களுக்கு விடயமே தெரியாதா? இன்று நம் மன்னரின் அரண்மனையில் திடீர் விருந்துக்கு ஏற்பாடாகி உள்ளது.

அதில் மன்னர் பரிசு கொடுப்பார் என்றும் அறிவிப்பு செய்து இருந்தனர்.

ஆகவே, விருந்து சாப்பிடும் பொருட்டும், தங்களுக்கு ஏதாவது அதிர்ஷ்டவசமாகப் பரிசு கிடைக்காதா? என்ற நப்பாசையாலும் மக்கள் அங்கே சென்றிருக்கின்றனர்!" என்றாள்.

(தொடரும்)

# மகாபாரதம்




துரியோதனன் மீது சந்தேகப்பட்டவள் விதுரரிடம் அதை தெரிவித்தாள். சந்தேகத்தை வெளிக்காட்ட வேண்டாம் என்றும் தெரிந்தால் பல இன்னல்கள் விளையும் என விதுரர் எச்சரித்தார்.

ஆற்றில் தூக்கி எறியப்பட்ட பீமன் மீது பல விஷப்பாம்புகள்ஏறிக் கடித்தன. விஷம் விஷத்தை முறித்தது. பீமன் எழுந்தான். பாம்புகளை உதறித்தள்ளினான். பீமனின் ஆற்றலைக் கண்ட வாசுகி அவனுக்கு அமிழ்தத்தை அளித்தது. புதுப் பொலிவுடன் பீமன் வீடு திரும்பினான்.

பீஷ்மர் அனைவருக்கும் விற்பயிற்சி பெற ஏற்பாடு செய்தார்.

கிரு பாச்சாரியாரும், துரோணாச்சாரியாரும் அப்பொறுப்பை ஏற்றனர். அனைவரும் வில் வித்தையில் வீரர் ஆயினர்.

ஆயினும் அருச்சுனன் தலைசிறந்து விளங்கினான். ஒரு மரம் அடர்ந்த கிளைகள். அவற்றின் ஒன்றில்ஒரு குருவி அதைக் குறி வைத்து அம்பு எய்த வேண்டும்.

இச் சோதனையில் சீடர்கள் மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது, இலை தெரிகிறது என்றனர்.

ஆனால் அருச்சுனன் மட்டும் குருவி தெரிகிறது என்றான். அதை நோக்கி அம்பெய்தினான்.

அருச்சுனனின் அறிவுக் கூர்மையை உணர்ந்த ஆச்சாரியார் அவனுக்கு வில்வித்தையில் எல்லா நுட்பங்களையும் கற்றுத் தந்தார்.

குந்திக்கு சூரியன் அருளால் பிறந்த குழந்தையை பெட்டியில் வைத்து கங்கையில் இட்டாள் அல்லவா? அந்த பெட்டியை திருதராட்டிரனின் தேர்ப் பாகன் கண்டெடுத்தான்.

மகப்பேற்ற அவன் அக்குழந்தையை எடுத்து வளர்த்தான். அவனே கர்ணனாவான்.

கௌரவர், பாண்டவருடன் சேர்ந்து வில் வித்தையைக் கற்றான் கர்ணன். அருச்சுனனுக்கு சமமாக அவன் திகழ்ந்ததால் துரியோதனனுக்குஅவனிடம்நட்பு ஏற்பட்டது.

**துரோணர்**


ஒரு சமயம் போட்டிகள் நடைபெற்றன. போட்டியைக்காண அனைவரும் வந்திருந்தனர். துரோணரின் கட்டளைப்படி பீமனும், துரியோதனனும் கதை யுத்தத்தில் ஈடுபட்டனர்.

போட்டி நீண்ட நேரம் நடைபெற்ற படியால் கடைசியில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். விளையாட்டு வினையாவதை உணர்ந்த துரோணர் போட்டியை நிறுத்தினார்.

அடுத்து வில் போட்டி . அருச்சுனன் தன் திறமையைக் காட்டினான். (தொடரும்)

# மாணவர்களுடன் சென்ற பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்து

## 27 பேர் உயிரிழப்பு



(ஜகார்த்தா)

இந்தோனேஷிய தீவான ஜாவாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு பாடசாலை மாணவர்கள் மற்றும் சில பெற்றோர்களை ஏற்றிச் சென்ற பேருந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிழந்துள்ளதாக நாட்டின் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஜாவா மாகாணத்தின் சுமேதாங் நகருக்கு அருகிலுள்ள பகுதியிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பேருந்தின் சாரதி வேகக் கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாகவே இந்த அனர்த்தம் சம்பவித்துள்ளதாக தேடல் மற்றும் மீட்புப் பிரிவினர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விபத்தில் காயங்களுக்குள்ளானவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (நி-4-8)

# இராணுவத்தினரின் தாக்குதலில் 30 பயங்கரவாதிகள் பலி




(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினரின் அதிரடித் தாக்குதலில் 30 பயங்கர வாதிகள் உயிரிழந்துள்ளனர். ஆப்கானிஸ்தானின் தெற்கு மாகாணமான காந்த ஹாரில் உள்ள அர்கந்தாப் மற்றும் ஜாரி மாவட்டங்களில் தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகளைக் குறிவைத்து இராணுவம் அதிரடித் தாக்குதல்களை நடத்தியது.

இதில் 30 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 8 பயங்கரவாதிகள் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக்கும் தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே 20 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர இருதரப்பும் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் கட்டார் தலைநகர் டோஹாவில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்தப்பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இதுவரை எட்டப்படாத நிலையில் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. (நி-4-8)

# மேற்குவங்க முதல்வர் மீது தாக்குதல்



(டில்லி)

இந்திய, மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று முன்தினம் புதன்கிழமை நந்திகிராம் விஜயத்தின் போது காயமடைந்ததால் எஸ்.எஸ்.கே.எம். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோயிலுக்கு வெளியே காரின் அருகே மம்தா நின்றிருந்த போது, அவரை 4.5 பேர் தாக்கியதாக மம்தா தெரிவித்தார். (நி-4-8)


# பற்றியெரியும் காட்டுத் தீ; 7 பேர் காயம், 100 வீடுகள் சேதம்

(ஆர்ஜென்டீனா)

ஆர்ஜென்டீனா - படகோனியா பிராந்தியத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி ஏழு பேர் காயமடைந்தனர். மேலும் 15 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஆண்டிஸ் மலைத் தொடருக்கு அருகிலுள்ள சுற்றுலாவுக்கு பெயர்போன இந்தப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயால் 100 வீடுகள் சேதமடைந்தன.

அத்துடன், அந்தப் பகுதியில் சிக்கியிருந்த சுமார் 200 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.



கடந்த ஆண்டு ஆர்ஜென்டீனாவில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லாயிரக் கணக்கான ஹெக்டேயர் காடுகள் அழிந்து நாசமாகியமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கம்போடியாவில் முதல் உயிரிழப்பு

(கம்போடியா)

கம்போடியாவில் நேற்று வியாழக்கிழமை கொரோனாத் தொற்றினால் முதலாவது மரணம் பதிவாகியது.

அதன்படி கடலோர நகரான சிஹானுக்வில்லேயில் அமைந்துள்ள சீன நிறுவனமொன்றில் சாரதியாக பணிபுரிந்த 50 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

கம்போடியா ஆசியாவில் மிகக் குறைவான கொரோனா நோயாளர்களை கொண்ட ஒரு நாடாகும். இருப்பினும் பெப்ரவரி 20 முதல் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# துணிகளுடன் சென்ற லொறியில் தீ பரவல் 60 லட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்

(சென்னை)

விக்கிரவாண்டி அருகே துணிகள் ஏற்றிச் சென்ற லொறி தீப்பிடித்து எரிந்தது. இதில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகின.

திருப்பூரில் இருந்து கொல்கத்தாவிற்கு துணி பண்டல் ஏற்றிக் கொண்டு சென்ற லொறியின் முன்பக்க டயர் பயங்கர சத்தத்துடன் வெடித்தது. சாரதியின் கட்டுப் பாட்டை இழந்த லொறியின் ஒரு பகுதி கீழே இறங்கியபடி சென்றது. அப்போது டீசல் டாங்க் வீதியில் உரசியபடி சென்றதால், அதில் கசிவு ஏற்பட்டு தீப்பற்றி கொண்டது.




இதனால் அந்த பகுதியில் திருச்சி-சென்னை வீதியில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இதற்கிடையே விழுப்பு ரம், திண்டிவனம் பகுதியில் இருந்தும் கூடுதலாக தீய ணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயணைக்கும் பணி மேற் கொள்ளப்பட்டது.

சுமார் 2 மணி நேரப் போராட்டத்துக்கு பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (நி-4)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யோசனையை ஆதரித்தால் ஆபத்து

(கொழும்பு)

**வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யோசனையை ஆதரித்தால் அவர்களுக்கு எதிராக நாட்டின் அரசியலமைப்பின்படி நடவடிக்கை எடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

இவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் சத்தியப் பிரமாணத்திற்கு எதிராகவே செயற்படுகிறார்கள்.

உறுப்பினர்களாக சத்தியப் பிரமாணம் எடுத்த பின்னர் அவர்களால் இவ்வாறான விடயங்களைக் கூறி உறுப்பினர் பதவிகளில் இருக்க முடியாது.

நாம் அரசாங்கம் என்ற ரீதியில் அந்த இடத்திற்கு செல்ல மாட்டோம். ஆனால் இது தொடர்பாக விசாரணை நடத்த முடியும்.

அவ்வாறு செய்யாமல் பொறுமையுடன் செயற்படுகின்றோம். பாராளுமன்றத்தில் உள்ள அநேகமான உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணத்தை மீறியுள்ளார்கள்.

அவர்களை வெளியேற்ற முடியும். ஆனால் நாம் அவ்வாறு செய்யப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (நி-4)

# ஆணைக்குழுதான் இறுதி முடிவெடுக்கும்

## என்கிறார் கெஹலிய



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் எவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழு தான் இறுதி முடிவெடுக்கும். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையையும், அதிலுள்ள பரிந்துரைகளையும் எதிரணியிலுள்ள பலரும் கண்டபடி விமர்சிக்கின்றனர்.

இந்த விசாரணை ஆணைக் குழுவை தற்போதைய ஜனாதிபதி நியமிக்கவில்லை. அதை முன்னாள் ஜனாதிபதிதான் நியமித்திருந்தார் என்பதை விமர்சனங்களை வெளியிடுவோர் கவனத்தில்கொள்ள வேண்டும்.

யாரையும் பழிவாங்குவதும் பாதுகாப்பதும் அரசின் நோக்கமல்ல. ஆனால், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

அதேவேளை, விசாரணை அறிக்கையில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் அமுல்படுத்தவும் முடியாது. ஏனெனில் சில குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லை.

எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் எவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழு தான் இறுதி முடிவெடுக்கும் எனத் தெரிவித்தார். (நி-4)

# சஹ்ரானிடம் பயிற்சி பெற்ற இருபெண்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை

## விரைவில் கைது செய்வோம் என்கிறார் வீரசேகர

(கொழும்பு)

சஹ்ரானிடம் தற்கொலை தாரிகளாக பயிற்சி பெற்ற இரண்டு பெண்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர்களை கைது செய்ய நடவடிக்கையெடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்திய விசேட உரையின் போதே இதைக் குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சஹ்ரானிடம் தற்கொலைதாரிகளாக பயிற்சி பெற்றுள்ள 17 பெண்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில் 5 பேர் தற்போது இறந்துள்ளனர். மூன்று பேருக்கு எதிராக குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

7 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய 2 பேரையும் கைது செய்ய நடவடிக்கையெடுக்கப்படும் என வீரசேகர தெரிவித்தார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2218

**பவித்திரா**

காரணம் இல்லாமல் கவலைப்படாதே...
காரணம் இருந்தாலும் கவலைப்படாதே...



நாம அத கண்டுக்காக இருந்தாலே அது பாட்டுக்கு போயிடும்...!

**கலைக்ஸ்**

தொல் பொருள் ஆராய்ச்சியில் ஏன் பெண்கள் அதிகம்...



பழசை நோண்டி எடுப்பதில் அம்புட்டு பிரியம்...!

**பாபுதரன்**


படிக்கும் பொது தூக்கம் வந்தால் என்ன செய்யனும்...



நமக்கு படிப்புத்தான் வரல தூக்கமாவது வருதே என்று தூங்கிடனும் சார்...!

**கவிதாயினி**

சம்சாரத்தை இரண்டு நாளாக காணோம்.
கவலைப்படாதிங்க தேடிப்புடிச்சுத் தாரோம்.



நல்ல சம்சாரமா தேடிப்புடிச்சு தாங்க சார்...!

**வரதன்**

சரியாகத்தான் பெயர் வைச்சிருக்கானுங்க வலைத்தளம் என்று...



சிக்கின வெளியே வரவே முடியல...!

**குயினா**

ஜோசியத்தில் பணவரவு,யோகம் என்று சொன்னா நடக்காம போகுது...



வீண்செலவு,நேரம் சரியில்லை என்றால் மட்டும் சரியாக நடக்குது...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஹிட்லரின் பாணியில் செயற்படும் கோட்டாபய அரசாங்கம்

## துஷார குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஹிட்லர் படிப்படியாக பாராளுமன்றத்தை பலவீனமடையச் செய்து இறுதியில் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்ததைப் போலவே , ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் செயற்படுகிறது.

அரசாங்கத்தின் மோசடிகள் எதிர்த்தரப்பினரால் வெளிப்படுத்தப்படும் என்ற அச்சத்தில் பாராளுமன்ற அமர்வு தினங்களும் நேரமும் சூட்சுமமான முறையில் குறைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மோசடிகள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு எமக்குள்ள ஒரே களம் பாராளுமன்றமாகும். ஆனால் தற்போது மிகவும் சூட்சுமமான முறையில் பாராளுமன்றம் கூடும் நேரம் குறைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்விற்கான தினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தைக் கூட்டுவதை ஆளுந்தரப்பினர் விரும்பவில்லை. இயன்றவரை பாராளுமன்றத்தைக் கூட்டாமலிருப்பதையே இவர்கள் விரும்புகின்றனர்.

கருத்துக்களை தெரிவிப்பதற்கு எமக்குள்ள களத்தை இவர்கள் இல்லாமலாக்குகின்றனர். எமக்கு மாத்திரமல்ல பாராளுமன்ற செய்தியாளர்களுக்கும் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் , ஊழியர்கள், அதிகாரிகள் , பாதுகாப்பு பிரிவினர் உள்ளிட்ட சகலருக்கும் பாராளுமன்றத்திற்கு வருகை தர அனுமதியளிக்க முடியுமெனில் ஏன் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் அனுமதியளிக்க முடியாது? ஊடகவியலாளர்கள் அனைவரும் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்களா?

பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயங்கள் அரசாங்கத்திற்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் அறியும். இவற்றை மக்களுக்கு கொண்டு செல்லக்கூடாது என்பதற்காகவே ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களின் உரிமைகளும் மீறப்பட்டுள்ளன. இதனையே ஹிட்லரும் செய்தார். அவர் ஜனநாயக ரீதியாக ஆட்சியைப்பற்றினார்.


அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் நாளாந்தம் பாராளுமன்றத்தை பலவீனமடையச் செய்தார். தொடர்ச்சியாக இவ்வாறு செய்து இறுதியாக பாராளுமன்றத்தையே தீக்கிரையாக்கினார். அதன் பின்னரே சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்தார். ஹிட்லரின் ஏகாதிபத்திய ஆட்சியை முற்போக்காகக் கொண்டு தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி முன்னெடுக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினரை பழிவாங்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவே அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுக்களை நியமிப்பதன் மூலம் முக்கிய பிரச்சினைகளை மறைப்பதே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடாகும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# குறுகிய காலத்தில் மக்களின் வெறுப்பை அரசு சம்பாதித்துள்ளது- முருத்தெட்டுவே

(கொழும்பு)

அரசாங்கம் தொடர்பில் மக்கள் வினவும் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் மக்களின் வெறுப்பை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது. ஆகவே விரைவில் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய நிலை ஏற்படும். அரச தலைவர்கள் தவறுகளை திருத்தி ஆட்சியதிகாரத்தை முன்னெடுப்பது அவசியமாகும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.



அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகள் வெறுக்கத்தக்கதாக காணப்படுகிறது. அமைச்சுக்களின் செயலாளர்கள் உரிய காரணமின்றி இடமாற்றம் செய்யப்படுகின்றமை அரசியல் அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகிறது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முன்னின்று செயற்பட்ட எம்மிடம் மக்கள் கேள்வி கேட்கிறார்கள். மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலை காணப்படுகிறது. குறுகிய காலத்தில் அரசாங்கம் மக்களின் வெறுப்பை பெற்றுக் கொண்டுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி , பிரதமர் ஆகியோரை ஆட்சிக்கு கொண்டுவர முன்னின்று செயற்பட்டுள்ளோம். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெறும் ஒரு சில செயற்பாடுகளை பார்த்து மௌனம் காப்பது பொருத்தமற்றதாகும். உரிய தீர்மானத்தை சிறந்த முறையில் எடுக்க வேண்டும்.

அரசாங்கம் தவறுகளை திருத்திக் கொண்டு செயற்பட வேண்டும். இல்லாவிடின் நாட்டு மக்களுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிராக போராட வேண்டிய நிலை ஏற்படும். அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டி அரச தலைவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு என தேரர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தப்பிக்க என்ன வழி?

ஒரு குரு உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னாடி ஒரு சீடன் வந்து நின்றான். " சுவாமி எனக்கு ஒரு பிரச்சினை "என்றான்.

சுவாமி இந்த ஊரில் ஒரு பெரிய செல்வந்தர் இருக்கின்றார். அவர் வெளிநாடுகளுக்கு யாத்திரை போகப் போகின்றார். அவர் போய்விட்டுத் திரும்பி வர பத்து மாதம் ஆகும் என்றான். அவர் வெளிநாடு போறதினால் உனக்கு என்ன சிக்கல்? என்று கேட்டார் குரு.

அந்த செல்வந்தருக்கு ஒரே பெண். அந்தப் பெண்ணை என்னுடைய பாதுகாப்பிலே விட்டுவிட்டுப் போக வேண்டும் என்று பிரியப்படுகின்றார் என்றான்.போகட்டும் அதனால் என்ன? என்றார் குரு.

இப்பொழுது சீடன் சொன்னான். சுவாமி என்னை இந்த ஊரிலே எல்லோரும் நேர்மையானவன் என்று சொல்கின்றார்கள். அதற்குத் தகுந்த மாதிரித் தான் என் மனதையும் பழக்கப்படுத்தி வைத்திருக்கின்றேன்.

இருந்தாலும் என்மீது எனக்கு முழு நம்பிக்கை இன்னமும் வரவில்லை. பத்து மாத காலம் அந்தப் பெண்ணை நான் பாதுகாப்பாக எங்கள் வீட்டிலே வைத்திருக்க வேண்டுமென்றால் எனக்குப் பயமாக இருக்கு. அதனால் என்னுடைய இந்தப் பிரச்சினை தீர என்ன வழி? நீங்கள் தான் சொல்ல வேண்டும் என்றான்.

இப்பொழுது குரு சொன்னார். இதோ பாருப்பா இது மாதிரியான சிக்கலில் இருந்து தப்பிக்கின்ற ரகசியம் தெரிந்த ஒருத்தன் இருக்கின்றான். அவனை எனக்குத் தெரியும். நீ நேராக அவனைப் போய்ப் பார்.

அப்படி என்று சொல்லி அவனைப் பற்றி எல்லா விபரமும் இருக்கின்ற இடத்தையும் சொன்னார். குரு அடையாளம் சொன்ன அந்த ஆள் ஒரு பைத்தியக்காரன். பக்கத்துக் கிராமத்திலே தான் அவன் இருந்தான்.

சுவாமி.. நீங்கள் சொல்கின்ற அந்த ஆசாமியைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவன் ஒரு பைத்தியக்காரன் என்று கேள்வி. அவன் எப்படி எனக்கு இந்தப் பிரச்சினையில் உதவ முடியும்? என்றான் சீடன்.

அதைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே. நீ நேராக அவனிடம் போ ஆனால் மிகவும் கவனமாக அவனை கவனிக்க வேண்டும் என்றார் குரு.

குருவே சொன்னதன் பின்பு எப்படி சும்மா இருக்க முடியும்? நேராக அடுத்த ஊருக்குப் போனான். அந்தப் பைத்தியக்காரனைப் பார்த்தான். இவன் போய்ச் சேர்ந்த சமயத்தில் அந்தப் பைத்தியக்காரனுக்கு ஒரு சிறுவன் மதுவை ஊற்றிக் கொடுத்து கொண்டிருக்கின்றான். அவன் அதை வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றான்.

இதைப் பார்த்ததும் இந்த சீடனுக்கு என்னமோ மாதிரி ஆகிவிட்டது. இருந்தாலும் குரு சொல்லி அனுப்பியிருக்கின்றதனால் அவனிடம் நெருங்கினான்.

ஐயா தயவு செய்து சொல்லுங்கள். இப்பொழுது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்றான்.

இப்போது அந்த ஆள் சொன்னான். இந்த சிறுவன் என்னுடைய மகன் இன்னும் அருகில் வந்து பார். இவன் ஊற்றிக் கொடுப்பது. மது இல்லை. வெறும் தண்ணீர் தான். நான் வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கின்றேன் என்றான்.

பின்பு எதற்கு நீங்கள் மது அருந்துவது மாதிரி பாசாங்கு செய்கின்றீர்கள்? நீங்கள் கையில் வைத்திருக்கின்ற கோப்பை மது அருந்துவதற்கு உள்ள கோப்பை தானே. அதிலே ஏன் தண்ணீரை ஊற்றிக் குடித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை நீங்கள் எதற்காக இப்படி இருக்கின்றீர்கள் என்றான் சீடன்?

நான் இப்படி இருக்கிறதனால் தான் ஒருத்தர் வெளிநாடு யாத்திரை போகும் போது அவருடைய மகளை என் பொறுப்பில் விட்டுவிட்டுப் போக வேண்டும் என்று பிரியப்படுவதில்லை. அதற்கு இது ஒரு உபாயம் என்றான் அந்த ஆள். இந்தக் கதை வேடிக்கையாக தெரிந்தாலும் இது மாதிரி பல சந்தர்ப்பங்களில் நாம் நடந்து தான் சில சிக்கல்களிலேயிருந்து தப்பிக்க வேண்டியிருக்கின்றது.


ஒரு குடும்பத் தலைவர் இருக்கின்றார்.அவருக்கு திடீர் என்று காக்கா வலிப்பு வந்துவிடும்.கீழே விழுந்து கையை காலை உதைத்துக் கொள்வார். உடனே அவர் மனைவி ஓடி வந்து சாவிக் கொத்தை அவர் கையில் கொடுப்பார்கள். அதற்குப் பின்பு வலிப்பு நின்று போய்விடும். எழுந்து கொள்வார். நான் ஒரு நாள் அவரிடம் கேட்டேன். ஏன் சேர் காக்கா வலிப்புக்கும் கையில் சாவிக் கொத்தைக் கொடுக்கிறதற்கும் சம்பந்தமில்லை என்று டாக்டர்கள் எல்லாம் சொல்கின்றார்களே உங்களுக்கு மட்டும் அது எப்படி சரியாகின்றது என்று கேட்டேன்.

அதற்கு அவர் அட போங்க சேர். நான் சும்மா அப்படி காக்கா வலிப்பு மாதிரி கீழே கிடந்து உதைத்துக் கொள்வேன் அது ஒரு உபாயம். அதைத் தவிர வேறு எந்த வழியிலேயும் என் மனைவி கையில் இருக்கின்ற பெட்டிச் சாவியை என்னால் வாங்க முடியாது என்றார்.

05

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



2015 இல் மாவட்ட ரீதியில் வட்டாரங்கள் அட்டவணை -4 இல் காட்டியவாறு பிரிக்கப்பட்டிருந்தன. அதாவது 4583 தனி உறுப்பினர் வட்டாரங்களாகவும் 241 இரு உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் 9 மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டன.

தேசிய எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்திருந்த அறிக்கையில் குறைபாடுகள் இருப்பதாக மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு கருதியதனால் அக்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக மற்றுமொரு ஐவர் அடங்கிய மீளாய்வுக் குழு 2015 ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

| உள்ளூராட்சிச் சபைகள் 2015 அட்டவணை-3 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | A | B | C | மாவட்டம் | A | B | C |
| கொழும்பு | 5 | 5 | 3 | மன்னார் | - | 1 | 4 |
| கம்பஹா | 2 | 5 | 12 | மட்டக்களப்பு | 1 | 2 | 9 |
| களுத்துறை | - | 4 | 13 | அம்பாறை | 2 | 1 | 17 |
| கண்டி | 1 | 4 | 17 | திருகோணமலை | - | 2 | 11 |
| மாத்தளை | 2 | - | 11 | அனுராதபுரம் | 1 | - | 18 |
| நுவரெலியா | 1 | 2 | 5 | பொலன்னறுவை | - | - | 7 |
| காலி | 1 | 2 | 17 | குருநாகல் | 1 | 1 | 19 |
| மாத்தறை | 1 | 1 | 15 | புத்தளம் | - | 2 | 10 |
| அம்பாந்தோட்டை | 1 | 1 | 10 | பதுளை | 2 | 1 | 15 |
| யாழ்ப்பாணம் | 1 | 3 | 13 | மொனராகலை | - | - | 10 |
| கிளிநொச்சி | - | - | 3 | இரத்தினபுரி | 1 | 2 | 14 |
| வவுனியா | - | 1 | 4 | கேகாலை | - | 1 | 11 |
| முல்லைத்தீவு | - | - | 4 | மொத்தம் | 23 | 41 | 272 |
| A-மாநகர சபை,B-நகர சபை,C- பிரதேச சபை | | | | | | | |

| அட்டவணை -4 2015ல் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டிருந்தவிதம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | A | B | C | D | மாவட்டம் | A | B | C | D |
| கொழும்பு | 252 | 28 | 7 | 329 | மன்னார் | 46 | 4 | - | 54 |
| கம்பஹா | 365 | 26 | – | 417 | மட்டக்களப்பு | 140 | 3 | - | 146 |
| களுத்துறை | 255 | 11 | - | 277 | அம்பாறை | 218 | 5 | 1 | 231 |
| கண்டி | 322 | 26 | 1 | 377 | திருகோணமலை | 116 | 10 | - | 136 |
| மாத்தளை | 152 | 08 | - | 168 | அனுராதபுரம் | 222 | 3 | - | 228 |
| நுவரெலியா | 142 | 22 | - | 186 | பொலன்னறுவை | 92 | 5 | - | 102 |
| காலி | 264 | 4 | - | 272 | குருநாகல் | 354 | 12 | - | 378 |
| மாத்தறை | 220 | 2 | - | 224 | புத்தளம் | 182 | 2 | - | 186 |
| அம்பாந்தோட்டை | 134 | 13 | - | 160 | பதுளை | 197 | 21 | - | 239 |
| யாழ்ப்பாணம் | 237 | 3 | - | 243 | மொனராகலை | 103 | 9 | - | 121 |
| கிளிநொச்சி | 38 | 1 | - | 40 | இரத்தினபுரி | 234 | 12 | - | 258 |
| வவுனியா | 51 | 6 | - | 63 | கேகாலை | 206 | 5 | - | 216 |
| முல்லைத்தீவு | 41 | - | - | 41 | மொத்தம் | 4583 | 241 | 9 | 5092 |
| A-1 உறுப்பினர் வட்டாரங்களின் எண்ணிக்கை,B- 2உறுப்பினர்களின் வட்டாரங்களின் எண்ணிக்கை,C- 3உறுப்பினர்களின் வட்டாரங்களின் எண்ணிக்கை D-மொத்தஉறுப்பினர்களின் எண்ணிக்கை | | | | | | | | | |

இக் குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசிய எல்லை வரையறைக்குழுவின் அறிக்கை 2015 ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது. மேற்படி தேசிய எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்திருந்த அறிக்கையில் குறைபாடுகள் இருப்பதாக மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு கருதியதனால் உள்ளூராட்சி அதிகாரசபைகள் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில் அக்குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்வதற்காக அசோகாபீரிஸ் தலைமையில் மற்றுமொரு ஐவர் அடங்கிய மீளா ய்வுக்குழு 2015 ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

## மீளாய்வுக்குழு -2015

வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட வட்டார எல்லை நிர்ணயச் செயற்பாடுகளின் உண்மைத் தன்மை குறித்து சமூகத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன் இதற்கெதிராக யோசனைகள்/ மேன்முறையீடுகள் /குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு உள்ளூராட்சி மன்ற நிறுவன வட்டார எல்லை நிர்ணயச் செயற்பாடுகளைத் தொடர்ந்து தொடச்சியாக எழுத்து மூலம் மற்றும் வாய்மூல முறையீடுகள்/முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டமையினால் அம்மேன் முறையீடுகள் /முறைப்பாடுகளை நியாயமான முறையில் விசாரணைக்குட்படுத்தி மீண்டும் வட்டார எல்லை நிர்ணயத்ல்த மறுசீரமைப்பதன் தேவை எழுந்தது.

இத்தேவைக்காகவே உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 அதிகார சபை) சட்டத்தின் 3 (ஈ) பிரிவின் கீழ் மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சிமன்ற அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய எல்லை நிர்ணயம் தொடர்பில் மேன்முறையீட்டு விசாரணைக்குழு/ மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டது.

மீளாய்வுக்குழுவில் ரி.அசோக பீரிஸ் - தலைவர், ஜனாப் ஏ.எஸ்.எம். மிஸ்பா-அங்கத்தவர் (ஐக்கிய தேசிய கட்சி), உபுல் குமார பெரும - அங்கத்தவர் (மக்கள் விடுதலை முன்னணி) சி.என்.எஸ். சாலியவிமலசூரிய மத்தியூ-அங்கத்தவர் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி), பேராசிரியர். பி.பாலசுந்தரம் பிள்ளை-அங்கத்தவர் (இலங்கை தமிழரசுக் கட்சி) ஆகியோர் கடமையாற்றினர்.

குறித்த குழுவில் நில அளவையாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி, தேர்தல் ஆணையாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரியொருவர் மற்றும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரியொருவர் என மேலும் மூவர் இருந்தனர். நில அளவையாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியாக நான் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

மீளாய்வுக் குழவின் செயற்பாடுகளாக அமைந்தது என்னவெனில் எல்லை நிர்ணய தேசியக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் யோசனைகள்/மேன்முறையீடுகளைக் கருத்தில் கொண்டு பொருத்தமானவாறு வட்டார எல்லை, இலக்கம் அல்லது எழுத்தினைச் சீர்திருத்துவதாகும்.

2015.11.01 ஆம் திகதி நியமிக்கப்பட்ட இக்குழுவின் காலஎல்லை 2016.01.31 ஆம் திகதி முடிவடைய இருந்த போதிலும் அதுவரையில் கிடைக்கப்பெற்ற கூடுதலான யோசனைகள்/மேன்முறையீகளை கருத்தில் கொண்டு தொடர்ந்தும் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் நோக்குடன் மற்றும் மிகுந்த நெகிழ்வுத் தன்மையுடன் இப்பணிகளை நிறைவேற்றும் நோக்குடன் 25 மாவட்டங்களைத் தழுவக்கூடியவாறு அது தொடர்பில் ஆர்வம் காண்பிக்கும் பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளை அழைத்து மாவட்ட மட்டக் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதனால் மீளாய்வுக் குழுவினால் பரிந்துரைகள் வழங்க காலதாமதம் ஏற்பட்டது.

மூன்று மாதத்திற்குள் தமது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தாலும் 2017 ஜனவரி 17 வரை அவர்களது அறிக்கை தாமதப்படுத்தப்பட்டது. மீளாய்வுக்கு உள்ளாகும் வட்டாரங்கள் குறித்தே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. மாற்றத்துக்கு உள்ளாகாத வட்டாரங்கள் பற்றிய விபரங்கள் பழைய வர்த்தமானியிலேயே பார்க்க வேண்டியிருந்தது. அக்குழுவின் மீளாய்வு அறிக்கை 2017 பெப்ரவரி 17 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

**மீளாய்வுக்குழுவின் அறிக்கை மூன்று மாதத்திற்குள் தமக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தாலும் அவர்களது அறிக்கை 15 மாதங்களின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டது.**

முன்னர் கூறியதுபோல் மீளாய்வுக்குழுவுக்கு வட்டாரத்தின் எல்லைகளில் மாற்றஞ் செய்தல், வட்டாரம் ஒவ்வொன்றினதும் புதிய எல்லைகளை வரையறுத்தல், வட்டாரத்தின் பெயர்கள், இலக்கங்கள் அல்லது எழுத்துக்களில் மாற்றம் செய்தல் போன்ற அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன.

மீளாய்வுக்குழு பல உள்ளூராட்சி அதிகார சபைகளின் பல அங்கத்தவர்கள் தொகுதிகள் வட்டாரத்தின் எல்லைகள், வட்டாரத்தின் பெயர்கள், இலக்கங்கள் மற்றும் எழுத்துக்களில் மாற்றங்கள் செய்தது. வட்டாரங்களுக்கு பெயரிடுவதில் பல எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிட்டது.

கல்முனை மாநகர சபையின் வட்டாரங்களுக்கு பெயரிடுவதில் இரு சமூகங்களுக்கிடையே ஒற்றுமை காணப்படாததால் வட்டாரங்களின் பெயர்கள் வட்டாரம் 01, வட்டாரம் 02 என்ற விதத்தில் பெயரிடப்பட்டது.

ஒரு உள்ளூராட்சி அதிகார சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வதற்கு மீளாய்வுக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஒரு உள்ளூராட்சி அதிகார சபையின் வட்டாரங்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(தொடரும்)

# காரிலிருந்து சடலம் மீட்பு



(கொழும்பு)

கொஹுவல - ஆசிரி மாவத்தையில் காரொன்றிலிருந்து சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காரும் சடலமும் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

களுபோவில - ஹாதிய மாவத்தையைச் சேர்ந்த 33 வயதான வர்த்தகரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஹுவல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி

### இறைவன் திருவடியே நிரந்தரமானது

இறைவன் திருவடியை நாம் எப்போது சரண் அடைகிறோமோ அப்போது தான் நமக்கு பிறப்பற்ற நிலையான முக்தி கிடைக்கும். ஆனால் நாம் நம்மை அறியாமல், அறிந்து கொள்ள ஆர்வம் இல்லாமல் மாய உலகில் உழன்று கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் நாமெல்லாம் அறியாத ஜீவன்கள்! எந்திர வாழ்வில் சிக்கி அல்லாடிக் கொண்டிருக்கிறோம். சொந்த தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, மாதச் சம்பளம் வாங்குபவர்களாக இருந்தாலும் சரி, தினம் தினம் எத்தனையோ பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு மத்தியில் தான் நாம், நமது ஆத்மாவை பிறவி எனும் பெருங்கடலில் நீந்தி கரையேற்ற வேண்டியுள்ளது. அதற்காகத்தான் நாம் கோவில், குளம் என்று ஓடிக் கொண்டிருக்கிறோம். சொர்க்கத்தில் நிச்சயம் இடம் உண்டு என்ற நம்பிக்கையில் பரமபத வாசலை மிதிக்கிறோம்.

இறைவனின் திருவடி நிழலில் நம் ஆத்மா இளைப்பாற வேண்டும் என்ற ஒரே இலட்சியம்தான் இதற்கெல்லாம் மூலமாக அமைகிறது. ஆனால் இறைவனின் திருப்பாதங்கள் தாமாகவே நம்மிடம் வருவதை நம்மில் பெரும்பாலானவர்கள் உணர்ந்தும் புரிந்து கொள்ளாமல் உள்ளனர். குரு சீடனை தேர்வு செய்து கொள்வது போல இறைவனும் தன் பக்தனை பொறி வைத்து பிடித்து தம் பாதக் கமலங்களை தாமே காட்டுகிறார். அது எப்படி என்கிறீர்களா?

விஷ்ணு தலங்களில் பெருமாளை தரிசனம் செய்து முடித்த பிறகு நம் தலை மீது வைக்கப்படும் "ஸ்ரீசடாரி"யைத்தான் சொல்கிறோம். அஞ்ஞானம் எனும் மாயையை நீக்குவது சடாரியே.

ஆழ்வார்களில் முதன்மையானவராகக் கருதப்படும் நம்மாழ்வார் மாயை எனும் சக்தியை வென்றவர். இதனால் அவர் பெருமானின் அம்சமாக கருதப்படுகிறார். வைணவ மரபில் அவர்தான் "ஆதி குரு" ஆவார். அவர்தான் நம்மிடம் சடாரியாக வருகிறார். அதன் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது.

தூக்குக்குடி மாவட்டத்தில் உள்ள ஆழ்வார் திருநகரியில் 9 ஆம் நூற்றாண்டில் ஒரு வைகாசி மாதம், விசாக நட்சத்திரத்தில் நம்மாழ்வார் அவதரித்தார். அதாவது பிரம்ம சூத்திரங்களை எழுதுவதற்கான வியாச அவதாரம் எடுத்த இறைவன் அந்த சூத்திரங்களுக்கு பொருளை விளக்க வேண்டும் என்று நம்மாழ்வாராக அவதாரம் எடுத்தார் என்பார்கள். இதனால் அவர் "வேதம் செய்த மாறன்" என்று போற்றப்பட்டார்.

அதுமட்டுமல்ல நம்மாழ்வார் ஒருவருக்கே 108 திவ்யதேச காட்சிகளையும் பகவான் காட்டி அருளினார். இதில் இருந்தே நம்மாழ்வாரின் அவதார சிறப்பை நாம் புரிந்து கொள்ளலாம்.

நம்மாழ்வார் பிறந்த போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. பொதுவாக கர்ப்பிணிப் பெண்கள், குழந்தை பெற்றுக் கொள்வதற்கு ஒரு வகை வாயு உதவி செய்யும். அந்த வாயு வெளியில் வரும் வேகத்தில் குழந்தை தாயின் கர்ப்பப்பையில் இருந்து வெளியில் வரும்.

அந்த வாயுவுக்கு சடம் என்று பெயர். இந்த வாயுவுக்கு இன்னொரு முக்கிய சக்தியும் உண்டு.

அதாவது ஒரு குழந்தை இந்த பூமியில் பிறக்கும் போது அதன் உச்சம் தலையில் "சடம்" வாயு பட்டதும் அந்த குழந்தை முன்ஜென்ம நினைவுகளை இழந்து விடும். இதனால் அந்த குழந்தையின் ஆன்மா பிறவிச் சூழலில் மீண்டும் சிக்கிக் கொள்ளும். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் அந்த குழந்தை மாயைக்குள் தள்ளப்படும்.

காரியார்-உடைய நங்கைக்கு மகனாகப் பிறந்த நம்மாழ்வார் அந்த மாயைக்குள் சிக்கவில்லை. அவர் பிறந்த போது அழவில்லை. இயற்கைக்கு மாறுபட்டவராக இருந்தார். இதனால் அவருக்கு "மாறன்" என்று பெயரிட்டனர்.

ஆனால் அவர் பிறக்கும்போது அழாமல் இருந்ததற்கான காரணம் பிறகு தான் எல்லோருக்கும் தெரிய வந்தது. தாயின் வயிற்றில் இருந்து பிறக்கும் போது பிறவிகளை மறக்க செய்யும் சடம் வாயுவை அவர் தம்மிடம் நெருங்க விடவில்லை. கோபத்தில் முறைத்துப் பார்த்ததால் அந்த வாயு அவரை தாக்கவில்லை. இதனால் அவருக்கு "சடகோபன்" என்ற பெயரும் ஏற்பட்டது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசிக்கு ஔடத சபை அங்கீகாரம்

(கொழும்பு)

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் "ஸ்புட்னிக் வி" என்ற கொரோனாத் தடுப்பூசிக்கு ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க இதனைத் தெரிவித்துள்ளரர். (நி-4)

## 7 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் இதுவரையில், 7 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்குக் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் புதன்கிழமை மாத்திரம் மேலும் 8 ஆயிரத்து 323 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, தடுப்பூசி செலுத்த ஆரம்பித்த கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் தற்போது வரையில், நாட்டில் இதுவரை 7 இலட்சத்து 52 ஆயிரத்து 298 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவிடம் இருந்து நன்கொடையாக கிடைத்த ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா கோவிசீல்ட் தடுப்பூசியின் மேலும் 5 இலட்சம் டோஸ்கள் எதிர்வரும் வாரத்தில் இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. (நி-4)

## முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பு

(அம்பாறை)

வெல்லாவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய குளங்கள் நீரால் நிரம்பியுள்ளதையடுத்து அக்குளங்களில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் அப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். குளங்களில் நீரருந்துவதற்காகச் செல்கின்ற ஆடுகள், மாடுகள் போன்ற விலங்கினங்கள் முதலைக்கு இரையாகி வருவதாக அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 180 | 300 |
| தக்காளி | 160 | 150 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 45 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 150 |
| கரட் | 140 | 200 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 80 | 100 |
| புடோல் | 120 | 100 | 100 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 130 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 90 | 80 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 280 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 200 | 140 | 150 | 280 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 500 | -- | 800 |
| போஞ்சி | 140 | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | 80 |
| கீரை – 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 130 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 230 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 140 | 150 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | 100 | 60 | 120 |

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 35 ஆவது அணி பழைய மாணவர்களும், மருத்துவ பீட மாணவர் ஒன்றியமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையில் இடம்பெறவுள்ளது.

மருத்துவ பீட மாணவன் இம்மானுவேல் சாமுவேலின் மூன்றாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டும், இரத்ததான முகாம் நடைபெறுகிறது.

மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4)

# 12 ஆவது நாளாகவும் தொடரும் உணவுத் தவிர்ப்பு போராட்டம்



(நல்லூர்)

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி இடம்பெற்று வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் 12ஆவது நாளாக நேற்று தொடர்ந்தது. நீதி வேண்டிய இந்த போராட்டம் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. (5-4-33)

# வவு. சிதம்பரபுரம் மலைப்பகுதியில் தீப்பரவல்; கட்டுக்குள் கொண்டுவந்த தீயணைப்பு படையினர்

(நெளுக்குளம்)

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் உள்ள மலைப் பகுதியில் ஏற்பட்ட தீ பரவலை கட்டுப்படுத்தி அயலில் இருந்த வீடுகளுக்கு தீ செல்லவிடாது வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் தடுத்துள்ளனர்.

நேற்று பிற்பகல் வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் உள்ள மலைப்பகுதியில் திடீரென தீ பரவியுள்ளது.

இதனை அவதானித்த கிராமவாசி ஒருவர் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா தீயணைப்பு பிரிவினர் மக்கள் குடிமனைக்குள் பரவலடையாது தடுத்ததுடன், மலைப்பகுதியில் ஏற்பட்ட தீ பரம்பலையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (5-4-250-299)

# நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.


இதில் தலைவராக செ. ஜெயபாலனும் செயலாளராக ஆ. சயந்தனும் உப தலைவராக கு.மயூரன் மற்றும் பொருளாளராக சி.துஸ்யந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (5-4-30)

# திருக்கேதீஸ்வரத்தில் கோபால் பாக்லே




(மன்னார்)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்திற்கு வருகை தந்து இந்திய அரசின் உதவியுடன் நடைபெற்று வரும் கருங்கல் சிற்ப வேலைகளையும் இதர வேலைகளையும் பார்வையிட்டதோடு வழிபாடுகளிலும் கலந்து கொண்டார். (5-4)



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் நூற்றாண்டை முன்னிட்டு மேற்படி சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை சங்க சனசமூக நிலைய மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

# மோ.சைக்கிள் - பட்டா விபத்து;ஒருவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா கண்டி வீதியில் (ஏ-9) வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக நேற்று பிற்பகல் 2.20 மணியளவில் இடம்பெற்ற பட்டா - மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துத் தொடர்பாக மேலும் தெரியவருகையில், வவுனியா நகரிலிருந்து கண்டி வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிளும் பட்டா ரக வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-250)



ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ராணி அறக்கட்டளையின் (இலண்டன்) நிதி அனுசரணையில் 26 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சனசமூக நிலையத்தால் ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் ஆறுமுகம் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்:-கிருஷ்ணகுமார்)

தாராள சித்தம் உள்ளவனாக இரு, அப்பொழுதுதான் பிறர் உன்னுடைய எண்ணத்தை சிரமேற் தாங்கிச் செயலாற்றும் தகுதியுடையவனாய் இருப்பாய்.

– கன்ஃபூசியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொழும்பு கர்தினாலுக்கு ஓர் அன்பு மடல்

வணக்கத்துக்குரிய கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கு அன்பு வணக்கம்.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை விவகாரங்கள் தொடர்பில் தாங்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களை விரிவாக அறிய முடிகின்றது.

குறிப்பாக 2019ஆம் ஆண்டு நடந்த ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டி இறுக்கமான கோரிக்கைகளை நீங்கள் முன்வைக்கின்றீர்கள்.

இதற்கு முன்னதாக நல்லாட்சியில் அரசியலமைப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் நடைபெற்றபோது,

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமையில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. பௌத்தமே இந்த நாட்டின் ஆட்சி மதம் எனக் கூறியிருந்தீர்கள்.

உங்களின் மேற்போந்த கருத்துக்களைக் கண்டு தமிழ் கத்தோலிக்க மக்களும் அதிர்ந்து போயினர்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பது தான் இலங்கையின் அமைதியின்மைக்கு மூலகாரணம்.

நிலைமை இவ்வாறாக இருந்தும் பௌத்த மதத்துக்கான முதன்மை குறைந்து போகக்கூடாது என்பதில் நீங்கள் உறுதியாக இருப்பதன் பின்னணி என்னவாக இருந்திருக்கும் என்ற விடயம் இன்னமும் எழுவினாவாகவே இருக்கிறது.

எதுவாயினும் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் நீங்கள் விடுக்கின்ற அறிக்கைகள் தொடர்பில், இலங்கை அரசாங்கம் அதீத கவனமும் கருசனையும் செலுத்துகிறது.

இந்நிலையில் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் உள்ளக விசாரணைகள் திருப்தியற்றதாக இருக்கும் பட்சத்தில், சர்வதேச விசாரணையை நாடவேண்டி இருக்கும் என்று நீங்கள் கூறிய கருத்து இந்த நாட்டின் அரசியல் தரப்பில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதேவேளை கத்தோலிக்க மதத் தலைவராக இருந்து கொண்டு சர்வதேச விசாரணையை நடத்த வேண்டி வரும் என நீங் கள் குறிப்பிட்டமை உங்களின் துணிச்சலை யும் சர்வதேசரீதியில் உங்களுக்கு இருக்கக் கூடிய செல்வாக்கையும் சுட்டி நிற்கின்றன. இதற்காக உங்களுக்கு எங்கள் நன்றிகள்.

ஆனாலும் உங்கள் தொடர்பில் எங்களிடம் மிகுந்த கவலை உண்டு.

ஆம், 2009ஆம் ஆண்டு வன்னியில் தமிழின அழிப்புப் போர் நடந்தபோது நீங்கள் மௌனமாக இருந்தீர்கள்.

இயேசு பிரானின் சிலுவையைச் சுமந்து நிற்கும் தாங்கள் ஈழத் தமிழ் மக்களை சர்வதேசம் காப்பாற்ற வேண்டும் என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால் அது பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கும்.

தவிர, இன்றுவரை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்த இடத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இதுவரை நீங்கள் கேட்காதது ஏன்?

துடிக்கத் துடிக்கத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது கண்டு நீங்கள் இரக்கம் கொள்ளாதது எதற்காக? இந்தக் கேள்விகள் இன்னமும் எங்களைத் துளைத்துக் கொண்டே இருக்கின்றன.

# அம்பிகை அம்மையாரின் உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

திருமதி. அம்பிகை செல்வகுமார் அவர்கள் லண்டனில் மேற்கொண்டுவரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் கையெழுத்திட்டு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

திருமதி அம்பிகை செல்வகுமார் அவர்களின் உணவு தவிர்ப்புப்போராட்டம் 13-ஆவது நாளை எட்டியிருக்கும் நிலையில், தமிழ் மக்கள், மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, அவரது அகிம்சைப் போராட்டத்துக்கு வழங்கிவரும் ஆதரவுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

அம்மையாரின் அகிம்சை முறையிலான போராட்டத்தினை சர்வதேச தரப்புக்கள் மதித்து, பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுத்தர இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்துகின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பரிந்துரைக்குமாறு ஐ.நா.பாதுகாப்புக் குழு மற்றும் ஐ.நா பொதுச் சபைக்கு பரிந்துரைத்தல் மற்றும் போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை திறம்பட விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும்,

சிரியாவில் நிறுவப்பட்டதைப் போன்ற ஒரு சர்வதேச சுயாதீன புலனாய்வு பொறிமுறையை வலியுறுத்தியும், இதன்மூலம், இலங்கை அரசின் சர்வதேச விதிமுறைகளை மீறிய குற்றங்களுக்கான சான்றுகள் மற்றும் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்டு குற்றவியல் வழக்குகளுக்கு இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இடம்பெறும் குறித்த போராட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இல.377/9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் அபிநயா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 200153300908) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** திக்கம், மனோகரா, அல்வாய், தேவரையாளி, வதிரி, சித்தி விநாயகர் பாடசாலை, திக்கம், அரசடி, இன்பருட்டி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, புளியங்கூடல், நாரந்தனை நீர் விநியோகத் திட்டம், மயிலப்புலம், சரவணை சந்தி, நாரந்தனை தெற்கு, சுருவில் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தருமபுரம், உழவனூர், கல்லடி, தம்பிராசபுரம், விசுவமடு, இளங்கோபுரம், தொட்டியடி, மாணிக்கபுரம், புன்னைநீராவி, தேறாவில், விசுவமடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தொட்டியடி SLA, மூங்கிலாறு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், வல்லிபுனம், தேவிபுரம், கைவேலி, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### திட நம்பிக்கை

ஒலியில் நம்பிக்கை வை. பின் மௌனத்திலும் நம்பிக்கை வை. ஒலி இனிமையாக இருக்கும் போது அதன் மீது நம்பிக்கை வைக்கவும் ஒலி இனிமையற்றதாக இருக்கும் போது மௌனத்தின் மீது நம்பிக்கை வைக்கவும்.

ஒருவர் ஏதாவது கெட்டதைச் சொன்னால் அதை உடனே நம்பி விடுகிறீர்கள். மனமும் மிகவும் குழம்பிவிடுகிறது. இனிமையற்ற ஒலியை நம்புவது, மனத்தை மேலும் கலக்கமடைய வைக்கிறது. அதுபோன்ற சமயத்தில் உங்கள் நம்பிக்கையை மௌனத்திற்கு மாற்றிக் கொள்ளுங்கள்.

மந்திரங்களை உச்சரிப்பதைப் போன்ற ஒலியின் மீது நம்பிக்கை வைக்கவும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கடவுள் நம்பிக்கைக்கும் செம்மையான அரசாட்சிக்கும் சம்பந்தம் உண்டு.

அரசாட்சி என்ற சொல்லுக்கு இரு பொருட்கள், 'அரசு- ஆட்சி' அரசாட்சி. 'அற-சாட்சி' அறசாட்சி என்று பதப்பிரிவு செய்து அறனைச் சாட்சியாகக் கொண்டு ஆள்வது அரசாட்சி என்று பொருள்படும்.

தனியான ஒரு அறையில் ஒருவன் பொய்க்கணக்கு எழுதினால் அவனை அரசாங்கம் தண்டிக்க முடியாது.

தெய்வத்தால் நாம் தண்டிக்கப்படுவோம் என்ற எண்ணம் மனிதனைத் திருத்தும். (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நவக்கிரக தோசமா? இதோ பரிகாரம்

பொதுவாக நமது வாழ்வில் நடக்கும் அனைத்து இன்ப துன்பங்களுக்கும் நவக்கிரகங்களே காரணம் என்று கூறப்படுகிறது.

சிலரது ஜாதகத்தில் சில நவக்கிரகங்களின் தோஷம் இருப்பதால் சில சிக்கல்கள் விளைகின்றன. அத்தகைய தோஷங்களை எளிய முறையில் போக்கி வாழ்வில் வளம்பெற செய்யும் எளிய பரிகாரங்கள் இதோ.

சிவப்பு மலர்களையோ அல்லது குங்குமப் பூவையோ குளிக்கும் நீரில் சிறிதளவு போட்டு பின்பு நான்கைந்து குவளைகள் அந்த நீரில் குளித்துவிட்டு பின் வழக்கம் போல சாதாரண நீரில் குளிக்கலாம். இதனால் சூரிய பகவானால் ஏற்படும் தோஷங்கள் விலகும்.

சந்திரனால் ஏற்படும் தோஷத்தை போக்கவும் இதை தான் செய்யவேண்டும். குளிப்பதற்கு முன்பு சிறிதளவு தயிர் எடுத்து அதை உடல் முழுக்க தடவி பின் குளித்துவந்தால் சந்திரனால் ஏற்படும் தோஷங்கள் விலகும். (தொடரும்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# நமது சூழலை காப்பது எமது பொறுப்பு

வாழ்க்கையின் அன்றாடச் செயற்ப்பாடுகளின்போது இயற்கைச் சூழலை நாம் எவ்வாறு சீரழிக்கிறோம் அல்லது வீணடிக்கிறோம் என்பதையெல்லாம் தொடர்ந்து பார்த்து வருகிறோம். பார்த்து வருவதோடு மட்டுமல்லாமல் அதனைச் சரிசெய்வதற்கான நமது பங்களிப்பையும் செய்யவேண்டும் என்ற உந்துதலையும் பெறுகிறோம்.

வெகு எளிதாக நம் கைகளுக்குள்ளேயே சூழலியல் எதிரிகளைச் சுமந்து செல்கிறோம். அப்படியா? என்று வியப்பு மேலிடும்! உண்மைதான். தற்போதுள்ள மிகமுக்கியமான சூழலியல் எதிரி பொலித்தீன் (Polythene), பிளாஸ்டிக் (Plastic) என்பனவாகும்.


காய்கறி வாங்கிவரும்போது துணிகள்வாங்கிவரும்போது மருந்துகள், எண்ணெய், இறைச்சி, புத்தகம், கணனி ..., ..., ..., இன்னும்... இன்னும்... என்ன வாங்கி வந்தாலும் அதனைச் சுமப்பதற்கு நாம் பொலித்தீன் (Polythene) பைகளையே பயன்படுத்துகிறோம்.

பிளாஸ்டிக் இன்று நாடு முழுவதும் பயன்படுத்தப்படும் ஒன்றாக திகழ்கிறது. இவை காய்கறி, பால், தேநீர்கடைகள், துணிக்கடைகள், மருந்துக்கடைகள், மின்னணு சாதனங்கள், பலசரக்கு பொருட்கள், வாகனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்றன விற்பனையாகும் இடங்களில் எண்ணற்ற முறையில் பொலித்தீன், பிளாஸ்டிக்கின் பயன்பாடு அதிகமாக உள்ளது. ஆனால் உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக்கின் நன்மைகள் அல்லது தீமைகள் பற்றி யாரும் சிந்திப்பது இல்லை. குறைந்த விலையில் பிளாஸ்டிக்பைகள் கிடைப்பதாலும் வசதியாக இருப்பதாலும் மக்கள் அவற்றை அதிகமாக பயன் படுத்துகின்றனர்.

முன்பெல்லாம் உணவுக்கடையில் சென்று உணவு வாங்கவேண்டுமென்றால் வீட்டிலிருந்து பாத்திரம் சில்வர் டப்பா, குழம்பு, சட்னி, சாம்பார் வாங்குவதற்கென்று தூக்குச்சட்டி, கண்ணாடி போத்தல் போன்றவற்றை எடுத்துச் செல்வார்கள். இப்போது இட்லிக்கு தனி பிளாஸ்டிக்கவர் சட்னிக்கு ஒன்று, சாம்பாருக்கு ஒன்று, காரச்சட்னிக்கு ஒன்று இவற்றையெல்லாம் சேர்த்து எடுத்துச்செல்ல பெரிய பொலித்தீன் (Polythene) பை ஒன்று. அதுவும் கிழிந்துவிடாமல் இருக்க மற்றொன்றையும் சேர்த்து எத்தனை பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துகிறோம். துணிக்கடைக்குப் போனால் ஒவ்வொன்றுக்கும் ஒன்று மொத்தமாக ஒன்று இலவசமாக ஒரு சில. இப்படி எல்லாவற்றையும் எடுத்துப்பாருங்கள். இவற்றில் மீண்டும் நாம் பயன்படுத்தத்தக்க அளவில் எத்தனை பைகள் உள்ளன? பாதிக்கு மேற்பட்ட பைகள் மிகவும் மெல்லிதான மீண்டும் பயன்படுத்தவாய்ப்பில்லாத சூழலில் மக்காத பிளாஸ்டிக் பொலித்தீன் பைகள்.

தெருவெங்கும் திரண்டிருக்கும் குப்பைகளைப் பாருங்கள். அவற்றில் பெரும்பாலானவை பிளாஸ்டிக்பைகள் தான். அவை குப்பையாக மட்டும் இருப்பதில்லை. மாடு, ஆடு பிறவிலங்குகளால் உண்ணப்படும் உணவுகளோடு கலந்து அல்லது அவற்றால் தவறாக உண்ணப்பட்டு அவ்விலங்குகள் உயிரிழக்கக் காரணமாகிறது. மழைநீரை மண்ணில்புகவிடாமல் தடுத்து நிலத்தடிநீர்மட்டம் குறையக் காரணமாகிறது.



எரிக்கும்போது வளிமண்டலத்தில் தேவையற்ற வாயுக்களை அதிகப்படுத்துகிறது. சூடான உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் பைகளில் வைத்து எடுத்துச் செல்லும் போது உண்டாகும் இரசாயன மாற்றங்களால் ஐதரோ காபன் (Hydro carbon) பியூரன் போன்றவை உணவுடன்கலந்து நச்சுத் தன்மையை ஏற்படுத்துகிறது. இத்தனை கேடுதரும் பிளாஸ்டிக் பைகளைப் பயன் படுத்துவதற்கு வெறுங்கையை வீசிக்கொண்டு போய் பொருள் வாங்கிவரலாம். ஸ்டைலா இருக்கும் மழையில் நனையாது தண்ணீர் உள்ளே போகாது என்று நாம் என்னென்னவோ சாக்கு போக்கு களைச் சொல்கிறோம். தண்ணீர் உள்ளே போகாது என்பது உண்மைதான். அதனால்தான் மழைத்தண்ணீர் மண்ணுக்குப் போகவில்லை என்பதை உணர்வோமா? நமது கையைவிட்டு இயற்கை போய்விடுகிறது என்பதை உணர்வோமா?



முன்பு மஞ்சள் நிறப்பைகள் அல்லது மாட்டுத்தாள் பைகள் (Brown paper bag) என்று ஒரு காலத்தில் கிண்டல் செய்யப்படும் பைகள்தான் பெரும்பாலான கடைகளில்வழங்கப்பட்டுவந்தன. ஆனால் இன்று எல்லாம் பிளாஸ்டிக்பைகள். பிளாஸ்டிக்பைகளின் பயன்பாட்டைக் குறைக்கும்விதத்தில் தான் அரசு அவற்றிற்குத் தனியாகக் காசு வாங்கச் சொல்லியிருக்கிறது. இது வரவேற்கத்தகுந்த ஒன்று. ஓசியில் கொடுப்பதால் தானே பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு முறையும் 3 ரூபாய், 5 ரூபாய் என்று கொடுத்தால், தானாக வீட்டிலிருந்து பைகளை எடுத்து வரத் தோன்றும் அல்லவா?

இன்று ஸ்டைலுக்கும் குறைவில்லை. துணிப்பைகள், சணல்பைகள் போன்றவை பலவடிவங்களில், அளவுகளில், வண்ணங்களில் கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தலாம். வாகனங்களில் பக்கவாட்டில் பெட்டிவைத்துக் கொண்டிருப்பது இதே ஸ்டைல் என்ற பெயரில் குறைந்துவிட்டது. அவ்வாறு பெட்டிகள் வைத்துக் கொண்டால் எவ்வளவோ நன்மை உண்டு. மழைநீரை மண்ணுக்குப் போகாமல் தடுப்பது பிளாஸ்டிக் மட்டுமல்ல... சிமெண்ட்தளங்களுக்கும் அதில் பெரும்பங்குண்டு.

மக்கள் பண்டையகாலங்களில் இருந்து வாழை இலையில் சாப்பிடுவதும் துணிப்பைகளில் தாம்பூலம் தருவதும் வழக்கமாக கொண்டிருந்தார்கள். பித்தளை, சில்வர் போன்றவைகளில் தண்ணீர் சேமித்தல், நீர் அருந்துதல், போன்ற முறைகளில் இருந்தவர்கள் தற்போது பிளாஸ்டிக் மோகத்தில் இயற்கை வாழை இலைக்கு பதிலாக பிளாஸ்டிக் இலைகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் கரண்டிகள் போன்ற எண்ணற்ற வடிவில் செயற்கையை நாடிச் செல்கின்றனர். ஆனால் பிளாஸ்டிக்கால் உருவாகும் பொருட்கள் அனைத்தும் இரசாயன முறையில் தயாரிக்கப்பட்டவை. இந்த பிளாஸ்டிக்கில் சூடாகவோ, குளிர்ச்சியாகவோ, வெகுநாட்களாக இருப்பினும் பிளாஸ்டிக்கானது இரசாயன மாற்றங்களால் அவற்றை நாம் பயன்படுத்தும்போது நம் உடலில் தேவையற்ற கொடிய இரசாயன பொருட்கள் சேர்த்து பல நோய்களுக்கு காரணமாவும், கான்சர் போன்ற வியாதியை உருவாக்கும் தன்மையையும் கொண்டதாகவும் உள்ளது. மேலும் இது வளரும் நமது சந்ததியினரையும் வெகுவாகப் பாதிக்கிறது.

வீட்டைச் சுற்றி சிமெண்ட்தளமும், வீதிகளில் தாரும் போட்டு நிரப்பினால் மழைநீர் எப்படி மண்ணுக்குப் போகும்? குப்பைகளில் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று பிரித்து, காய்கறி, பழங்கள், உணவுப் பொருட்கள் போன்ற மக்குபவற்றை உரமாக்கலாம். தாள், பிளாஸ்டிக், கண்ணாடி போன்ற மக்காதவற்றை மறுசுழற்சிக்கு அனுப்பலாம். இதற்கென தனித்தனி குப்பைத் தொட்டிகள் வைத்துப் பழகினால் குப்பைகளைப் பிரிப்பது வெகு எளிது.

தேவையான அளவு தண்ணீரைப் பயன்படுத்துவது, வெளியூர் பயணங்களின்போது ஆங்காங்கே வாங்கி, அங்கேயே வீணடிக்காமல் தேவையானதை உடன் எடுத்துச் செல்லலாம். இதனால் பிளாஸ்டிக் போத்தல்களின் பயன்பாடு குறையும்.

சூழல் கெட்டு விட்டது என்று யார் யார் மீதோ குற்றம் சொல்லாமல் அன்றாடம் நாம் செய்ய முடிந்தவற்றை சூழலுக்காக தொடங்கலாம், வீடுகளில் செய்யலாம், நண்பர்களைப் பழக்கலாம், பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தலாம். ஒவ்வொருவரும் செய்து விட்டு வெளியில் வந்து பார்த்தால் நாடும் உலகமும் மாறித்தானே இருக்கும்.

இந்த உலகம் அனைவருக்குமானது. நாம் சொல்லும் அனைவருக்கும் என்பதில் மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகள், தாவரங்கள், பறவைகள், பூச்சிகள், கடல்வாழ் உயிரினங்கள் உட்பட அனைத்து உயிரினங்களுக்குமானது. அதை அடுத்ததலைமுறைக்குப் பத்திரமாக வழங்கவேண்டியது நம்கடமை.

எதையும் பயன்படுத்தக் கூடாது என்பதல்ல... அனைத்தும் நமக்கானது தான். ஆனால் தேவைக்குப் பயன்படுத்தும் வரை அது நிலைத்திருக்கும். தேவையில்லாமல் பயன்படுத்தினால் எதுவும் அழியும்.நாமும் அழிவோம். பெரியார் தாத்தா சொன்ன சிக்கனம் பணத்துக்கு மட்டுமல்ல அனைத்துக்கும்தான்.

இந்த உலகம் இப்போது நம்கைகளில் தரப்பட்டிருக்கிறது. பொறுப்பு இனி நம்முடையது! வாருங்கள்...

நமது சூழலை காப்பது எமது பொறுப்பு.

**பிரதீபா சிவகுமார்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**விலங்கியல் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## முதியவர்...

டம் தோட்டம் பகுதியில் விபரீத முடிவெடுத்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவர் நேற்றுக் காலை தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

வீட்டில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்திலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சங்கரன் நடராசா (வயது-66) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104)

## பிறந்தநாளில்...

வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் பிறந்தநாள் தினமான நேற்று முன்தினம் வீட்டில் நின்ற குடும்பஸ்தரை வீட்டு வாசலில் வைத்து 18 வயது பூர்த்தியடையாத இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்தவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர், அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அருளம்பலம் துசியந்தன் (வயது - 32) என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-3,100,315,316)

## குடும்பஸ்தர்...

நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் செட்டிகுளம் கங்கங்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் (வயது-52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் வீட்டை விட்டு வெளியில் சென்ற குறித்த நபர் மாலை ஆகியும் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து உறவினர்கள் தேடியுள்ளனர்.

இந்நிலையில் செட்டிகுளம் பொது மயானத்திற்கு அருகாமையில் உள்ள காட்டுப் பகுதியில் மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் கொலையா? தற்கொலையா? என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,250)

## யாழ்.நகரில்...

அவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று மாவட்ட போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபரிடமிருந்து சுமார் 4 லட்சம் ரூபாய் பெறுமதியான 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ம-3,33)

## யாழில் மேலும்...

ளது.

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 319 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற 29 பேரிடம் பரிசோதனை பெறப்பட்டது.

அவர்களில் கிளிநொச்சியையும் மற்றையவர் பதுளையையும் சேர்ந்தவர்கள் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## 5 பேர்...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 520 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## வீடு புகுந்து...

நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை புலோலிப் பகுதியில் வசிக்கும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் வீட்டிலேயே இக் குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

முகத்தை மறைத்து முகமூடி அணிந்து கத்தியோடு உள்நுழைந்த இருவரைக் கண்டதும் வீட்டில் இருந்த அதிபரின் மனைவி, மகள்கள் ஆகியோர் கூச்சலிட்டதைத் தொடர்ந்து, அதிபரின் மனைவியின் கழுத்தில் இருந்த தாலியை அபகரித்து தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## அதிகாரப்...

ஜெனிவா விவகாரம் மற்றும் தமிழ் மக்களின் தீர்வு திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் தொடர்பான விடயங்களிலும் அதன் முன்னேற்றங்கள் குறித்தும் இந்தியா அக்கறையுடன் அவதானத்தில் கொண்டுள்ளது.

தமிழர்கள் உட்பட இலங்கையில் அனைத்து சமூக பிரிவினரும் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவத்திற்கான அபிலாஷைகளை அடைவது இலங்கைக்கு பலம் அளிக்கும்.

எனவே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்கீழ், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை செயல்படுத்துவது இலங்கையின் நல்லிணக்கம், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உதவுவதோடு நாட்டை பலப்படுத்தவும் உதவும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## இலங்கைக்கான...

யம் மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் அவர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு செல்லவுள்ளதுடன் அங்கு இடம்பெறும் கூட்டத்திலும் கலந்துகொள்ளவுள்ளார். (ம-3)

## சர்வதேச நீதி...

முஸ்லிம் மக்கள் அரசியல் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் எனப் பலர் இணைந்து கொண்டனர். (ம-3)

## குருந்...

பின்னர் சிவராத்திரி விழாவில் மக்கள் கலந்து வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார்கள்.

நேற்றுக் காலை குருந்தூர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கோணமடு பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகள் நடைபெற்றுள்ளன.

1990ஆம்ஆண்டின் பின்னர் இந்த ஆண்டு ஸ்ரீகோணமடு பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இம்முறையே சிவராத்திரி வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றுள்ளன.

சிவராத் திரி விழாவினை முன்னிட்டு அங்கு பொலிஸாரும் படையினரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-3,281)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## சர்வதேச...

தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில்உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணி என்ன, பிரதான சூத்திரதாரி யார்? என்பது தொடர்பில் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு தவறியவர்கள் தொடர்பிலேயே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்றார். (ம-3)

## யாழ்.-...

வில் சேவை ஆரம்பிக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கூறியுள்ளார்.

இதன் மூலம் கொழும்பு - தூத்துக்குடி இணைப்பிற்கான வாய்ப்புள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை 45.27 மில்லியன் அமெரிக்க டொலர், இந்திய உதவியுடன் அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியாவுடனான திட்டமிட்ட விமானங்களுக்காக இலங்கை தனது வான்வெளியை மீண்டும் திறக்கும் போது பலாலிக்கான விமான சேவையை இந்தியா மீண்டும் ஆரம்பிக்கும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் கூறியதாக செவ்வியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ம-3)


செவன
திகதி 11/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 321
Q 33 47 50 67

மஹஜன சம்பத
திகதி 2021/03/11
சீட்டிழுப்பு இலக்கம் 4423
N 6 8 4 1 7 1

மெகா பவர்
திகதி 11/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0787
F 18 60 74 79 80

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2718
J 01 04 49 52

தன நிதானய
திகதி - 2021.03.11
சீட்டிழுப்பு இலக்கம் - 460
C 38 49 55 61

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1219
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 11.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 116,517,245
வெற்றி இலக்கங்கள் 09 12 23 58 K
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3549
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 11.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,982,196
வெற்றி இலக்கங்கள் 09 18 21 56 L
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 24,43,389/=
திகதி : 11.03.2021
வெற்றி வாரம் : 3100
வர்ணம் : மண்ணிறம்
வெற்றி இலக்கங்கள் 09 23 29 62 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,858,900

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1393 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 11/03/2021 தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் N 04 28 31 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 73,624,446/=

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 417 திகதி 11.03.2021 வர்ணம் நீலம்
N 12 33 54 8
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,857,632
தொ. பே.: 0112 333 346/47
Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## பணியாளர் தேவை

காரைநகரில் இயங்கும்
தனியார் நீர் விநியோக கம்பனி
ஒன்றிற்கு நிர்வாக முகாமையாளர்
(25 - 50) வயதிற்குப்பட்ட
ஆண் / பெண் இருபாலாரும்
முன் அனுபவத்துடன்
விண்ணப்பிக்கவும்.
தங்குமிட வசதியும் வழங்கப்படும்.
(C-1653)

**077 704 0356**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1636)

0768226240 DHL

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான
நிறுவனம் ஒன்றிற்கு முன் அனுபவம்
உள்ள (ஆண் / பெண்)
வேலையாட்கள் தேவை.

- காசாளர்
- சிட்டை எழுதுனர் (Bill Clerk)

(6102)

**LINGAN CREAM HOUSE**
No. 213, Stanley Road, Jaffna.

## விஸ்டம்

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு

புதிய பிரிவு ஆரம்பம்

**A/L 2023**

தொழினுட்பப்பிரிவு (C-1661)

- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம்(7), விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி

077 248 7774 , 076 552 9093, 021 221 7860

## சிறப்பு சலுகை

ஆரோக்கியா பல் வைத்தியசாலையில்
வழங்கப்படும் பல் வைத்திய சேவைகளுக்கான
ஆரம்பகால கட்டண சலுகைகளை
பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுவீர்
(6109)

**AAROKYA DENTAL CARE**
Petrol Shed Lane, Nelliyady.
**074 070 2241, 075 975 9828**

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L 2023 தொழினுட்பபிரிவு ஆரம்பம்**

14.03.2021 ஞாயிறு காலை 9.00 மணி

- பொறியியல் தொழினுட்பம்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

(C-1638)

**077 017 5346**



# மரண அறிவித்தல்

## நாகநாதர் சிவஞானம் (ராசா)

**(ஓய்வுபெற்ற CTB காப்பாளர்)**

அன்னை மடியில்
07.06.1943

இறைவன் அடியில்
10.03.2021



ஏழாலை மேற்கு, புளியங்கிணத்தடி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இல.76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (மிலேனியம் விருந்தினர் விடுதி) கொண்ட நாகநாதர் சிவஞானம் (ராசா) நேற்று முன்தினம் (10.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் - பாறுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் நல்லதம்பி - ஞானாம்பிகையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புக் கணவரும் சீவரத்தினம், கனகமணி, சிவலிங்கம், சிவாநந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காந்தரூபன், சாந்தினி (மிலேனியம்), ஜெயரூப்ன் (லண்டன்), ஜெயந்தினி (கனடா), சிவரூபன் (லண்டன்), கஜரூபன் (லண்டன் Thurka Exports) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தங்கேஸ்வரி, மகாராசா, நாகேஸ்வரி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, சரஸ்வதி, கந்தசாமி மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயகௌரி, சுகுமாரன் (மிலேனியம்), எழிலரசி (லண்டன்), அருட்செல்வன் (கனடா), மிதுனாலினி (லண்டன்), மடோனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஸ்னுஜா, துஸ்ஜா, சானுகா, வனோஜ், நிவேஸ், மானஸ்வி, கரிகாலன், பவன்னா, அஷ்சயா, அகல்யா, சாயுரி, நிவேதி, சேயுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.03.2021) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஏழாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு அதன் பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மிலேனியம் விருந்தினர் விடுதி,**
**077 601 6310, 077 243 1310**

(C-1672)

தகவல்:
சாந்தரூபன் குடும்பம்
சுகுமாரன் சாந்தினி குடும்பம்
ஜெயரூபன் குடும்பம்
அருட்செல்வன் ஜெயந்தினி குடும்பம்
சிவரூபன் குடும்பம்
கஜரூபன் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.